# மாஜினி

[வாழ்க்கை வரலாறு]

வெ. சாமிநாத சர்மா

(1961)

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்
சென்னை — புதுக்கோட்டை

பிரபஞ்ச ஜோதி பிரசுரம்—22

# மாஜினி

( வாழ்க்கை வரலாறு )

எழுதியது:

வெ. சாமிநாத சர்மா

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்

(தொடக்கம் 1936)

சென்னை :: புதுக்கோட்டை

முதற் பதிப்பு: 1941
இரண்டாம் பதிப்பு: ஜனவரி, 1950
மூன்றும் பதிப்பு: ஆகஸ்ட், 1955
நான்காம் பதிப்பு: பிப்ரவரி, 1961
உரிமை:— மங்களம்-சாமிநாதன் டிரஸ்ட்டை சேர்ந்தது.

விற்பனை, விநியோகம்
பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்,
புதுக்கோட்டை, திருச்சி ஜில்லா.

ஆசிரியர்:
12, ஸர் முகம்மது உஸ்மான் ரோடு,
தியாகராய நகர், சென்னை—17.

விலை ஒரு ரூபாய் ஐம்பது நயேபைசே

பிரபஞ்ச ஜோதி பிரிண்ட்டிங் சர்வீஸ், புதுக்கோட்டை.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | பிரசுராலயத்தின் வார்த்தை | .... | 4 |
| | வாசகர்களுக்கு | .... | 6 |
| 1. | உதயம் | .... | 9 |
| 2. | அழைப்பு | .... | 18 |
| 3. | சிறை | .... | 31 |
| 4. | புரட்சி | .... | 41 |
| 5. | ஏக்கம் | .... | 48 |
| 6. | சேவை | .... | 54 |
| 7. | ஏமாற்றம் | .... | 60 |
| 8. | அஸ்தமனம் | .... | 70 |
| | அனுபந்தம் | .... | 82 |

# பிரசுராலயத்தின் வார்த்தை

இந்தியாவுக்கு காந்தி எப்படியோ, ருஷ்யாவுக்கு லெனின் எப்படியோ, ஐர்லாந்துக்கு டிவேலரா எப்படியோ, அப்படியே இத்தலிக்கு மாஜினி. இவர்களை ஒரே தராசில் வைத்து நிறுவை செய்ய முடியாது; செய்யவும் கூடாது. ஆனால் இவர்களிடத்தில் சில அபூர்வமான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவர்கள் கொண்ட குறிக்கோள், சுய ஜாதியினரின் சுதந்திரம் என்ற பெயரைத் தாங்கிக் கொண்டிருந்த போதிலும், அஃது உலகத்திலுள்ள சகல ஜாதியினரும் சுதந்திரம் பெறவேண்டுமென்ற கோஷத்தைச் செய்து கொண்டிருந்தது. இவர்களுடைய தேசீயம், சர்வ தேசீயத்திற்கு முரண்பட்டதாயிருக்கவில்லை. இவர்கள், அரசியல் வாதிகளாகவே வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் அதற்காக இவர்கள் போற்றப்படவில்லை; மனிதத் தன்மையில் நிறைவுற்றவர்கள் என்பதற்காக, அந்த மனிதத் தன்மை, தங்கள் நாட்டினரிடத்தில் மட்டுமல்ல, உலகத்திலுள்ள எல்லா நாட்டினரிடத்திலும் நிறைந்திருக்கவேண்டுமென்று அல்லும் பகலும் உழைத்து வந்ததற்காகப் போற்றப்படுகிறார்கள்; ஆம், எந்த நாளும் போற்றப்பட்டு வருவார்கள்.

மாஜினி, வெறும் அரசியல் வாதியாக மட்டுமில்லாமல், ஒரு மனிதனாகவும் வாழ்ந்து வந்தமையால் தான், அவனுடைய வாழ்க்கை, இந்நூலாசிரியர் கூறுவதுபோல், ஒரு சோக நாடகமாயிருந்திருக்கிறது.

இதிலிருந்து தெரிந்துகொள்ளக்கூடிய பாடமென்ன? அரசியல்வாதியா யிருப்பது சுலபம்; மனிதனாக வாழ்வது கடினம் என்பதுதான். இதனாலேயே, உலகத்தில் பெரும்பாலோர், ஆழமில்லாத அரசியல் குளத்தில் நீந்த முன் வருகிறார்கள் போலும்!

மனிதத்தன்மை யென்னும் மலையேறி நின்றார் தம் மாண்பினை எடுத்துரைக்கும் நூல்களை ஒழுங்காக வெளியிட்டு வரவேண்டுமென்பதே எங்கள் நோக்கம். இதற்காக நாங்களும் சிறுசிறு குன்றுகளைக் கடக்க வேண்டியிருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டாருடைய பூரண ஆதரவு இருக்கிறதென்ற தைரியமும், அந்தத் தைரியத்தினால் கடக்க வேண்டிய குன்றுகள் எத்தனை எதிர்ப்பட்டாலும் அத்தனையையும் சுலபமாகக் கடந்து விடுவோமென்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கிறது. விருந்திலும் மருந்திலும் இனிக்கும் தமிழே! நீ வாழ்க!!

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்

# வாசகர்களுக்கு

கி. பி. பத்தொன்பதாவது நூற்றுண்டில், இத்தலி சுதந்திர வாழ்வு பெற்றது. இதற்காகப் பாடுபட்டவர் மூவர். ஒருவன் மாஜினி; இன்னொருவன் காரிபால்டி; மற்றொருவன் காவர். 'இத்தலியின் ஆத்மா, மாஜினி; ஆயுதம், காரிபால்டி; அறிவு, காவர்.' இப்படி வருணிக்கிருன் ஜார்ஜ் மெரிடித்[1] என்ற ஆங்கிலக் கவிஞன்.

இந்த மூவரும், ஒரே லட்சியத்திற்காக அதாவது இத்தலியின் சுதந்திரத்திற்காகப் போராடினுர்கள்; அதற்காக ஒன்று சேர்ந்தார்கள். ஆனால் மூவரும் வேறு வேறுன சுபாவமுடையவர்கள்; பரஸ்பரம் பகைமையும் பொருமையும் கொண்டவர்கள். இது வேடிக்கை. இந்த மூவரில், உலக விவகாரங்களைப் பொறுத்தமட்டில். யார் அதிகமான வெற்றியடைந்திருக்கிருர்களென்று பார்த்தால், முதலாவது காவர்; இரண்டாவது காரிபால்டி; மூன்றுவது மாஜினி. ஆனால் மனிதத் தன்மை என்னும் தராசில் இந்த மூவரையும் வைத்து நிறுத்துப் பார்க்கிற போது, மாஜினியே அதிக எடையுடையவனுகக் காணப்படுகிருன்; அவனுக்கு அடுத்தது காரிபால்டி; மூன்றுவது காவர்,

மாஜினியின் மனிதத்தன்மைக்கு எடுத்துக் காட்டாக, அவனது இளமையில் ஒரு சிறு சம்பவம் நிகழ்ந்தது. ஆறு வயது நடக்கிறது அவனுக்கு. நிரம்ப மெலிந்த தேகம். ஒரு நாள் தாயார் அவனை வெளியிலே நடத்தி அழைத்துக்கொண்டு போனுள். வழியில் ஒரு கிழப் பிச்சைக்காரன் தென்பட்டான். அவனை உற்றுப்பார்த்தான் மாஜினி. தாயாரின் கைப்பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு அந்தப் பிச்சைக்காரனிடம் ஓடினுன்; அவன் கழுத்தைத் தன் கைகளால் கட்டிக்கொண்டான்; முத்தம் கொடுத்

1 Georgo Meredith 1828—1909.

தான்; 'அம்மா, இவனுக்கு ஏதேனும் கொடுங்கள்' என்று தழதழத்த குரலில் கூறினன். அந்தப் பிச்சைக் காரன் மகிழ்ச்சி பொங்க, 'அம்மா, இவனை நன்ருகப் போஷித்து வாருங்கள்; பிற்காலத்தில் இவன் எல்லா ஜனங்களிடத்திலும் அன்பு செலுத்துகிற ஒருவனுக இருப்பான்' என்று ஆசீர்வதித்துவிட்டுச் சென்ருன்.

ஆங்கில மொழிப் புலவனுகிய தாமஸ் கார்லைலும் மாஜினியும் கருத்து வேற்றுமை மிகவுடையவர்கள்; ஆனல் நெருங்கிய நண்பர்கள். முன்னவன், பின்னவனைப் பற்றி, லண்டன் டைம்ஸ் பத்திரிகையின் 15—6—1844 இதழில் எழுதிய ஒரு கடிதத்தில் பின் வருமாறு குறிப்பிடுகிருன்:— "மாஜினியைப் பல வருஷ காலமாகத் தெரிந்துகொண்டிருக்கும் பாக்கியம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. உலக விவகாரங்களைப் பற்றி அவனுக்குள்ள அனுபவ ஞானம், திறமை முதலியவைகளைப் பற்றி நான் எந்த விதவான அபிப் பிராயப்பட்ட போதிலும், ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் நான் தாராளமாக அபிப்பிராயம் கூறமுடியும். அஃதென்ன வென்ருல், நான் சந்தித்த பல மனிதர்களைக் காட்டிலும் மாஜினி அதி விவேகி; சீல சுபாவமுடையவன்; உத்தமமான நாணயஸ்தன்; ஜீவ காருண்யமுடையவன்; பெருமனம் படைத்தவன். மகான்கள் என்று அழைக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்கள் ஒரு சிலரே. அந்த ஒரு சிலரில் மாஜினி ஒருவன். இந்த மகான்கள், மகான் தன்மையென்பதைத் தெரிந்துகொண்டு, அதைத் தங்களுடைய தினசரி வாழ்க்கையில் அனுஷ்டித்துக் காட்டிவருகிருர்கள். ..................மாஜினியைப்பற்றித் தெரிந்து கொள்வது, நமது அறியாமையை அகற்றிக்கொள்வதாகும்."

மாஜினி புரட்சிகள் பல நடத்தினன்; ஆனல் தோல்வியே கண்டான். ஒரு சாண் ஏற்றமானல் இரண்டு சாண் இறக்கமென்கிற மாதிரி அவனுடைய அரசியல் வாழ்வு இருந்தது. இத்தாலியக் குடியரசுக் கனவையே அவன் கண்டுவந்தான்; ஆனல் முடியரசாகவே

அதுபலித்தது. இப்படியெல்லாம் ஏற்பட்டாலும் அவன் சோர்வடைய வில்லை; தன் குடியரசுக் கொள்கையைக் கடைசி மூச்சு இருக்கிறவரை கைவிடவில்லை; எந்த ஒரு விவகாரத்திலும், மனிதத் தன்மையிலிருந்து சிறிதுகூட நழுவவில்லை; பணத்திற்கோ, பதவிக்கோ, புகழுக்கோ, தன் ஆத்மாவை விற்று விடவில்லை. உண்மைக் கொடியை உயர்த்தியே பிடித்து வந்தான்.

அவன் உள்ளம் அழுக்கில்லாதது; விசாலமானது; குறுகிய தன்மைகளுக்கு அதில் இடமிருக்கவில்லை. இதனால்தான் அவன், இத்தலியின் விடுதலையை நாடியது போல், உலக சகோதரத்துவத்தையும், மானிட சமுதாயத்தின் ஒற்றுமையையும் நாடினன். அவனுடைய பேச்சிலும் எழுத்திலும் தேசீயம் தலை தூக்கி நின்றாலும், அது, சர்வ தேசீயத்திற்கு முரண் பட்டதாயிருக்கவில்லை; சர்வ தேசீயத்தைத் தழுவிக் கொண்டிருந்தது. அப்படியே உரிமைகளைக் காட்டிலும் கடமைகளையே அவன் அதிகமாக வலியுறுத்தி வந்தான். பிரெஞ்சுப் புரட்சியை ஆதரித்து தாமஸ் பெயின்[1] என்பவன் **மனிதன் உரிமை** என்ற நூலை வெளியிட்டான். அதற்கு மறுப்புப்போல் மாஜினி, **மனிதன் கடமை** என்ற நூலை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

மாஜினியின் வாழ்க்கை ஒரு சோக நாடகம். **மனிதன் கடமை** மூலமாகவும் **மாஜினியின் மணி மொழிகள்** மூலமாகவும் அவனுடைய குரலைக் கேட்பதோடு, அவனுடைய உருக்கமான வாழ்க்கை நாடகத்தையும் சிறிது — ஆம்; சொற்ப நேரந்தான் — பார்க்க வேண்டாமா? தமிழன்பர்களே! பாருங்கள். வணக்கம்.

தியாகராய நகர்
சென்னை }

1 Thomas Paine 1737—1809.



மாஜினி
1805–1872

# 1. உதயம்

பிரிட்டன், ஆஸ்திரியா, ப்ருஷ்யா, ருஷ்யா ஆகிய நான்கு வல்லரசுகளும் சேர்ந்து, 1814-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம், நெப்போலியனின் [1] கொட்டத்தை அடக்கி விட்டன. அவனும் முடிதுறந்து எல்பா[2] தீவுக்குச் சென்றுவிட்டான். ஆனால் அடுத்த வருஷம் மார்ச்சு மாதம் அவன் அங்கிருந்து தப்பி பிரான்சுக்கு வந்து அரசைக் கைப்பற்றிக்கொண்டு நூறு நாட்கள் வரை ஆண்டான். நூறே நாட்கள்தான். அதற்குமேல் அவனைத் தலைதூக்க விடவில்லை மேற்படி வல்லரசுகள். 1815-ஆம் வருஷம் ஜூன் மாதம் வாட்டர்லூ யுத்தத்தில் [3] அவனை அடியோடு வீழ்த்தி விட்டன; செயின்ட் ஹெலீனு [4] தீவுக்கு மிகுந்த பந்தோபஸ்துடன் அனுப்பியும் விட்டன. அவன் வாழ்க்கையும் அங்கேயே முடிந்து விட்டது. அவன் வாழ்வு, வீரமான வாழ்வு; ஆனால் சோகமான முடிவு. இருக்கட்டும். அது தனிக் கதை.

நெப்போலியன் முடிதுறந்து எல்பா தீவுக்குச் சென்றதும், மேலே சொல்லப்பட்ட வல்லரசுகள், "நெப்போலியன் ஒழிந்தான்; இனியேனும் ஐரோப்பாவில் 'நிரந்தரமானதொரு சமாதானத்தை' ஏற்படுத்த

1 Napoleon I (Bonaparte) 1769—1821.

2 Elba. வடஇத்தலிக்கு மேற்கிலுள்ளது.

3 Battle of Waterloo 18—6—1815. வாட்டர்லூ என்பது, பெல்ஜியம் நாட்டின் தலைநகரான ப்ரஸ்ஸெல்ஸுக்கு (Brussels)க்குச் சமீபத்திலுள்ள ஒரு கிராமம், இதற்கருகில்தான் யுத்தம் நடைபெற்றது.

4 St. Helena. அத்லாந்திக் மகாசமுத்திரத்தில், தென்னாப்பிரிக்காவுக்கு மேற்கேயுள்ளது; பிரிட்டனின் ஆதிக்கத்துக்குட்பட்டது.

வேண்டும்" என்று சொல்லிக்கொண்டு 1814-ஆம் வருஷம் செப்டெம்பர் மாதம், ஆஸ்திரியாவின் தலை நகரான வியன்னாவில் ஒரு மகாநாட்டைக் கூட்டின. 1815-ஆம் வருஷம் ஜூன் மாதம் வரை, சுமார் ஒன்பது மாத காலம் இடைவிட்டு இடைவிட்டு இந்த மகாநாடு நடைபெற்றது. இதற்குத்தான் 'வியன்னா காங்கிரஸ்'[1] என்று பெயர். சரித்திரப் பிரசித்தி பெற்றது. இதில் கூடிய வல்லரசுப் பிரதிநிதிகள், ஐரோப்பாவிலுள்ள எந்த நாட்டிலேனும், அரசாங்கத்திற்கு விரோதமான புரட்சி இயக்கங்கள் தோன்றுமானால் அவற்றை எப்படி அடக்குவதென்பதைப் பற்றிக் கலந்தாலோசிக்கத் தாங்கள் அடிக்கடி ஒன்று சந்திக்கவேண்டுமென்று ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். இந்த மகாநாட்டுக்குச் சூத்திரதாரியாக இருந்தவன், பெயரளவில் ஆஸ்திரியாவின் பிரதம மந்திரியாகவும் ஆனால் உண்மையில் ஐரோப்பிய சர்வாதிகாரிகளெல்லோரையும் ஆட்டிவைக்கிற சர்வாதிகாரியாகவும் இருந்த மெட்டர்னிக்[2] என்பவன். இவன், இந்த மகாநாட்டின் மூலமாக ஐரோப்பா வெங்கணும் அடக்கு முறை விதைகளைத் தெளித்தான். ஆனால் அவற்றினின்று புரட்சி முளைகள் தான் கிளம்பின!

உலகத்திலே சமாதானத்தை நிலைநிறுத்த 1918-ஆம் வருஷம் வார்சேலில்[3] ஒரு மகாநாடு கூடியது. நானூற்று நாற்பது ஷரத்துக்களைக் கொண்ட ஓர் உடன்படிக்கையை 1919-ஆம் வருஷம் ஜூன்

---

1 Vienna Congress.

2 Metternich 1773—1859.

3 Versailles. பாரிஸ் மாநகருக்குத் தென்மேற்கே பதினைந்து மைல் தொலைவிலுள்ள நகர்.

மாதம் இருபத்தெட்டாந் தேதி நிறைவேற்றியது. ஆனால் இதற்குப் பிறகுதான் உலகத்தின் பல பாகங்களிலும் 1939-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் தொடங்கப்பெற்ற இரண்டாவது உலக மகா யுத்தத்தைத் தவிர்த்து—சுமார் பதினேழு யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன. புரட்சியை அடக்கி ஒடுக்கி ஐரோப்பாவில் புதியதோர் ஒழுங்கை — அதாவது சுயேச்சாதிகார ஒழுங்கை — ஸ்தாபிக்க வேண்டுமென்று, மேற்படி வார்சேல் மகாநாட்டுக்கு நூற்று நான்கு வருஷங்களுக்கு முன்னர் வியன்னாவில் கூடிய மகாநாடு, நூற்றிருபத்தோரு ஷரத்துக்களைக்கொண்ட ஓர் உடன்படிக்கையை 1815-ஆம் வருஷம் ஜூன் மாதம் ஒன்பதாந்தேதி நிறைவேற்றியது. ஆனால் இதற்குப் பிறகுதான், சுமார் ஐம்பது வருஷங்களுக்குள் எழுபதுக்கு மேற்பட்ட புரட்சிகள் ஐரோப்பாவில் நடைபெற்றன. வார்சேல் உடன்படிக்கையில் எழுபது பிரதிநிதிகள் கையெழுத்திட்டு பதினேழு யுத்தங்களைக் கிளப்பினார்கள்! வியன்னா உடன்படிக்கையில் பதினேழு பிரதிநிதிகள் கையெழுத்திட்டு எழுபது புரட்சிகளை உண்டுபண்ணினார்கள்!

நெப்போலியன், சுயேச்சாதிகாரிகளின் பார்வையில் ஒரு தூமகேதுவாக இருந்திருக்கலாம். ஆனால், அவனையறியாமலே அவனால் அநேக நன்மைகள் உண்டாயின. ஒவ்வொரு நாட்டிலும் உறங்கிக் கிடந்த தேசீய உணர்ச்சியானது தலைதூக்கி நின்றது. ஜனங்களிடத்தில் ஒருவித ஒற்றுமை உணர்ச்சி உண்டாயிற்று. "நெப்போலியனுடைய சேனைகள் எங்கெங்குச் சென்றனவோ அங்கெல்லாம் அவை புரட்சி விதைகளை ஊன்றிக்கொண்டு சென்றன" என்று ஒரு சரித்திரக்காரன் கூறுகிறான். நெப்போலியன், தனது

ஆதிக்கத்திற்குட்பட்ட எல்லா நாடுகளிலும் ஸ்திர மானதொரு மத்திய அரசாங்கத்தை நிறுவினான். ஜனங்களுக்குப் பட்சபாதமில்லாத நீதி கிடைக்குமாறு செய்தான். போக்கு வரவு சாதனங்களை அதிகப் படுத்தினான். பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்தான். ஜனங்கள், இவைகளையெல்லாம் நுகர்ந்து திருப்தி கொண்டார்களோ என்னவோ நமக்குத் தெரியாது. ஆனால் ஒழுங்கான ஓர் அரசாங்கம், கண்டிப்பான ஓர் அரசாங்கம் தங்களை நிருவாகம் செய்கிறதென்பதை அவசியம் உணர்ந்தார்கள்.

இத்தலியைப் பொறுத்தமட்டில் நெப்போலியன் ஒரு விசேஷ சிரத்தை காட்டினான். அவன் ஓர் இத்தாலியனல்லவா?[1] அவனுடைய ஆதிக்கத்திற்குட் படுவதற்கு முன்னர், இத்தலி, சுமார் பன்னிரண்டு தனித் தனி நாடுகளாகப் பிரிந்திருந்தது. நெப்போலியன் இந்தப் பிரிவினைகளை யெல்லாம் தகர்த்து விட்டான்; மூன்று மாகாணங்களாக வகுத் தான். இன்னும் பல நன்மைகளைச் செய்தான். சுயேச்சாதிகாரிகளைப் பரிபூரணமாக வெறுக்கிற மாஜினி கூட, நெப்போலியனுடைய நிருவாகத்தைக் குறித்துப் பின்வருமாறு சிலாகிக்கிறான்:—

1805-ஆம் வருஷத்திலிருந்து 1813-ஆம் வருஷம் வரை சுமார் எட்டு வருஷ காலம், இத்தாலிய இதிகா சத்திலேயே மிகவும் குறிப்பிடத் தக்க காலமாகும். இந்தக் காலத்தில் இத்தலியில், ஜனங்களின் கல்வி ஞானம் அபிவிருத்தியடைந்தது. தேசத்தின் ஐசுவரியம் வெகு வேகமாகப் பெருகியது. இத்தாலியர்கள்,

---

1 கார்ஸிக்கா (Corsica) தீவில் இத்தாலிய பரம்பரையைச் சேர்ந்த ஒரு குடும்பத்தில் பிறந்தவன்.

பிரெஞ்சு ஆதிபத்தியத்தின் ஆதரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்களென்பதும், யுத்தங்களிலே அடிக்கடி ஈடுபடுத்தப்பட்டார்களென்பதும் உண்மை. ஆனல் அவர்களிடத்திலே புகுத்தப்பட்ட தேசீய உணர்ச்சியானது, அவர்களுடைய ஆத்மாவை உயர்த்தி விட்டது. எந்த லட்சியத்திற்காக அவர்கள் அரும்பாடுபடுகிறுர்களோ அந்த லட்சியமாகிய ஐக்கிய இத்தலியை, ஒன்றுபட்ட இத்தலியை, அவர்கள் தூரத்திலிருந்து தரிசிக்க முடிந்தது."

இந்த மாதிரியான தேசீய உணர்ச்சியும், ஒற்றுமை உணர்ச்சியும் ஐரோப்பாவின் பல நாடுகளிலும் பரவி யிருப்பதை, ஆங்காங்கு அடங்கிக் கிடந்த சுயேச்சாதிகாரிகள் மௌனத்தோடு சகித்துக்கொண்டு வந்தார்கள். ஒரு சிலர், அடிக்கிற காற்ருேடு தலை சாய்த்துக் கொடுத்தார்கள். ஆனல், நெப்போலியன், ஐரோப்பிய அரசியல் அரங்கத்தினின்று மறைந்தானே இல்லையோ, அவரவரும் கச்சை கட்டிக்கொண்டு வந்து வியன்னவில் கூடினர்கள். அந்தந்த நாட்டு ஜனங்களுடைய உணர்ச்சிகள், பரம்பரைச் சம்பிரதாயங்கள் முதலியன ஒன்றையும் கவனியாமல் அவரவரும் தங்களுக்கிஷ்டமானபடி நாடுகளைப் பங்கு போட்டுக் கொண்டார்கள். பங்கு போட்டுக் கொண்டார்களா? இல்லை; இல்லை. பங்கு போட்டுக் கொடுக்கப்பட்டார்கள். யாரால்? மெட்டர்னிக் இருந்தானல்லவா? அவன், எந்த நாட்டிலும் ஆஸ்திரியாவின் கை ஓங்கி இருக்கிற மாதிரியாக நாடுகளைப் பிரித்துக் கொடுத்தான். அவனுடைய ஏற்பாட்டின்படி, இத்தலியில், வடபாகத்திலுள்ள லம்பார்டி, வெனீஷியா[1] முதலிய

1 Lombardy, Venetia.

மாகாணங்கள் ஆஸ்திரியாவுக்குப் போய்ச் சேர்ந்தன. பீட்மாண்ட்[1] என்ற பிரதேசத்தின் அரசன், வட மேற்குப் பிரதேசங்களையும், ஸார்டீனியா[2] என்ற தீவையும் எடுத்துக்கொண்டான். ஸ்பெயின் தேசத்து போர்பன் அரச வமிசத்தினர்[3], ஸிஸிலி[4] தீவு உட்பட்ட தெற்கு மாகாணங்களைத் தங்களுடையதாக்கிக் கொண்டு விட்டனர். போப்பரசரும் இன்னும் சில சில்லரைப் பிரபுக்களும், மத்தியப் பிரதேசத்தைத் தனித்தனியாகப் பிரித்தெடுத்துக் கொண்டனர்.

இப்படி இவர்களனைவரும், தங்களுக்குப் பங்கு கிடைத்ததோடு சும்மா யிருக்கவில்லை. ஒருவர்க் கொருவர் பரஸ்பர அவநம்பிக்கையினால் அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டனர். இதனால் ஜனங்கள் பாடு திண்டாட்டமாகி விட்டது. ஒரு மாகாணத் திற்கும் மற்றொரு மாகாணத்திற்கும் சரியான போக்கு வரத்து இல்லை. சுங்க வரிகள் ஒவ்வொரு மாகாண எல்லையிலும் விதிக்கப்பட்டன. இதனால் வியாபாரம், கைத்தொழில் முதலியன செழித்து வளர முடியாமல் போயின. இலக்கிய ஓட்டமானது தட்டுத் தடுமாறிச் சென்றது. ஒரு மாகாணத்தில் வெளியாகிற நூல்கள், பத்திரிகைகள் முதலியவற்றை, அடுத்த மாகா ணத்தில் வசிக்கிறவர்கள் சுலபமாக வாங்கிப் படிக்க முடியவில்லை. நீதி நிருவாக முறை, அரசாங்க நிருவாக முறை, சட்டப் பிரயோக முறை முதலியன, மாகாணத் திற்கு மாகாணம் வித்தியாசப்பட்டிருந்தபடியால், வக்கீல்கள், இஞ்சினீயர்கள் முதலிய தொழில் நிபுணர் களும், உத்தியோகஸ்தர்களும், தங்கள் தங்களுடைய

1 Piedmont. 2 Sardinia.

3 Bourbons. 4 Sicily.

அறிவையும் திறமைகளையும் விரிவுபடுத்திக் காட்ட முடியாதவர்களாய், வளர்ச்சி குன்றியும் அநேக நிர்ப் பந்தங்களுக்குட்பட்டும் கிடந்தார்கள். எல்லா மாகாணங்களிலும் நிருவாக ஊழல் சகிக்க முடியவில்லை. ஜனங்களுக்கு அதிகமான கல்வியறிவு உண்டாகாதபடி என்னென்ன நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தலாமோ அவை யெல்லாம் ஏற்படுத்தப்பெற்றன. எங்குப் பார்த் தாலும் அரசாங்க ஒற்றர்களின் உபத்திரவம் அதிகமா யிருந்தது. ஜனங்கள் எப்பொழுதும் அச்சத்துட னேயே வாழ்ந்து வந்தார்கள். போதாக் குறைக்குத் தரித்திரம். கேட்பானேன் வாழ்க்கையிலே சோர்வு ஏற்படுவதற்கு? ஒரு தலைமுறையில் எவ்வளவு மாறுதல் ஏற்பட்டு விட்டது?

இத்தலியில், இத்தாலியர்கள் அந்நியர்களாயிருந் தார்கள். ஆஸ்திரியாவின் ஆதிக்கமானது இவர்களை அப்படிச் செய்துவிட்டது. சுருங்கச் சொன்னால், ஜனங்கள், அடிமைகளாக உயிரை வைத்துக்கொண்டி ருந்தார்கள்; மனிதர்களாக வாழ்க்கையை நடத்த வில்லை. அந்நிய ஆதிக்கத்துக்குட்பட்டிருக்கும் தனது நாட்டு மக்களைப் பார்த்து, மாஜினி பின்வருமாறு கதறுகிறான் :—

"தேசம், சுதந்திரம், சகோதரத்துவம் முதலிய யாவும் அவர்களிடமிருந்து (இத்தாலியர்களிட மிருந்து) பறிக்கப்பட்டு விட்டன. அவர்களுடைய மனப் போக்குகள் சிதைக்கப்பட்டும், அடக்கப்பட்டும், ஒரு குறுகிய வட்டத்திற்குள் பிணைக்கப்பட்டும் இருக் கின்றன, இங்ஙனம் செய்தவர்கள் யார்? இத்தாலியர் களுடைய மனப்போக்குகள், தேவைகள், நோக்கங்கள் முதலியனவற்றை அறியாத அந்நியர்கள். ஆஸ்திரிய தேசத்து ஒரு ராணுவச் சேவகனுடைய பிரம்பினால்,

இத்தாலியர்களுடைய தேசீய பரம்பரை உடைக்கப் படுகிறது. அவர்களுடைய அழியாத ஆத்மாவானது, வியன்னு நகரத்திலுள்ள சிங்காதனத்தில் அமர்ந் திருக்கும் ஒரு மனிதனுடைய மூடத்தனமான சபல புத்திக்குப் பந்தப்பட்டுக் கிடக்கிறது.''

இவ்வளவு தொந்தரவுகளிருந்த போதிலும், நெப்போலியன் ஊன்றிய புரட்சி விதைகள் ஆங்காங்கு முளை கிளம்பாமலில்லை. ரகசியச் சங்கங்கள் பல இடங்களில் தோன்றி அந்நிய ஆதிக்கத்தை ஒழிப் பதற்கு வேலை செய்து கொண்டிருந்தன. இங்ஙனம் வேலை செய்துகொண்டிருந்த சங்கங்களில் முக்கிய மானது 'கார்போனுரி'[1] என்னும் ஸ்தாபனம். இதற்கு 'கரி எரிக்கிறவர்கள்' என்று அர்த்தம். சட்ட ரீதியான அரசாங்கத்தை அமைப்பது, தேசீய சுதந் திரத்தைப் பெறுவது, எல்லா ஜனங்களும் சுதந்திரத் தோடிருக்கும்படியாகச் செய்வது முதலியன இதன் நோக்கம். இதற்கு ஐரோப்பாவின் பல பாகங்களிலும் கிளைச் சங்கங்கள் இருந்தன. அறிவிற் சிறந்த இத்தாலி யர்களிற் பலரும், ஒழுக்கம், ஒழுங்கு என்பவைகளை அணுவளவும் அறியாத துணிச்சல்காரர் பலரும் இதில் அங்கத்தினர்களா யிருந்தார்கள். இதனுல் இவர் களால் ஒன்றுபட்டும் தொடர்ந்தும் ஒரு காரியத்தைச் செய்ய முடியவில்லை, இவர்களுடைய புரட்சி முயற் சிகள் வெற்றி பெருமற் போனதும், ஜனங்களுக்குச் சாதகத்தை உண்டாக்காமற் போனதும் ஆச்சரிய மில்லை யல்லவா? இந்த கார்போனுரி சங்கமானது, நாளா வட்டத்தில் தேய்ந்து மறைந்து போய் விட்டது.

1 Carbonari.

1815-ஆம் வருஷத்து வியன்னு காங்கிரஸுக்குப் பிறகு, இத்தலியைப் பல சுயேச்சாதிகாரிகள் பங்கு போட்டுக்கொண்ட பிறகு, அந்தச் சுயேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடுவதற்காகப் பல ரகசியச் சங்கங்கள் தோன்றத் தொடங்கிய பிறகு, ஹா! ஹா! இத்தலியிலே என்னென்ன அடக்கு முறைகள் உபயோகிக்கப்பட்டன! எழுத்துரிமை, பேச்சுரிமை, சங்கமாகச் சேர்கிற உரிமை என்று யாரேனும் வாயெடுத்தால் போதும். இருட்டறை தான்! இரும்புச் சங்கிலிகள்தான்!

இப்படிப்பட்ட நிலைமையில் ஜனங்களுக்கு உயர்ந்த லட்சியத்தைப் புகட்ட, அடங்கிக் கிடக்கிற தேசீய உணர்ச்சியை எழுந்திருக்கச் செய்து அதனை ஒழுங்குபடுத்திவிட, இத்தலியை ஒன்றுபட்ட ஒரு நாடாக்க, தீர்க்க திருஷ்டியுள்ள ஒரு தலைவன் தேவையாயிருந்தது. அப்படிப்பட்ட தலைவன் எங்கே, எங்கே யென்று இத்தாலிய ஜன சமுதாயத்தின் ஆத்மா தேடிக்கொண்டிருந்தது. இதோ என்று மாஜினியை எதிரில் கொண்டு நிறுத்தினுள் இத்தாலிய மாதா. நவ இத்தலியின் உதயம்!

# 2. அழைப்பு

புதிய உலகத்தைக் கண்டுபிடித்த கொலம்பஸ்[1] எந்த ஜினேவா நகரத்தில்[2] பிறந்தானே அதே ஜினேவா நகரத்தில், புதிய ஐரோப்பாவை நிர்மாணித்தவர்களில் ஒருவனென்று கருதப்படுகிற ஜோஸப் மாஜினி[3] 1805-ஆம் வருஷம் ஜூன் மாதம் 22-ஆம் தேதி பிறந்தான். இவன் தந்தை ஒரு வைத்திய நிபுணன். உள்ளூர்ச் சர்வ கலாசாலையில் உடற்கூறு சாஸ்திர ஆசிரியனாக இருந்தான். நல்ல கைராசியுடையவன். இதைக்கொண்டு இவன் அதிகமான பொருளையும் புகழையும் சம்பாதித்திருக்கலாம். ஆனால் இவன் அப்படிச் செய்யவில்லை. தன்னுடைய வைத்தியத் திறமையையும், ஒழிந்த நேரத்தையும் ஏழை மக்களின் நலனுக்காகச் செலவிட்டான். மாஜினியின் தாயார், குடும்ப நிருவாகத்தில் மகா திறமைசாலி. வாழ்க்கையில் கரடு முரடான பாகங்கள் நிறைய உண்டு என்பதைத் தன் மகனுக்கு உணர்த்தி வந்தாள். இந்தப் பயிற்சி, மாஜினியின் பிற்கால வாழ்க்கைக்குப் பெரிதும் பயன் பட்டது.

குழந்தைப் பருவத்திலிருந்தே மாஜினி மிகவும் சூடிகையுடையவனா யிருந்தான். எந்த விஷயத்தையும் சுலபமாகக் கிரகித்துக் கொண்டு விடுவான். அதே பிரகாரம், தன் மனத்தில் பட்ட எந்த விஷயத்தையும்

---

1 Columbus 1451—1506.

2 Genova.

3 Giuseppe Mazzini 1805—1872.

தாராளமாக எடுத்துச் செல்வான். யாருக்கும் பயப்படமாட்டான். ஆனால் இவனுடைய அறிவுக் கூர்மைக்குத் தகுந்தாற்போல் இவனுடைய தேக பலம் இல்லை. இது பெற்றோர்களுக்கு எப்பொழுதுமே ஒரு கவலையாயிருந்தது. தொட்டால் சிணுங்கி யென்று சொல்லுவார்களே அப்படிப்பட்ட சுபாவமுடையவன் இவன். பிடிவாத குணம் அதிகமாக உண்டு. இதனால் பெற்றோர்கள் இவன் விஷயத்தில் வெகு ஜாக்கிரதையுடன் நடந்து வந்தார்கள்.

எல்லாப் பிள்ளைகளையும் போல் ம்ாஜினி சிறு வயதில் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்படவில்லை. வீட்டிலேயே ஓர் ஆசிரியனை நியமித்து லத்தீன் பாஷையைக் கற்பித்தார்கள். இந்த லத்தீன் ஆசிரியனிடம் மாஜினிக்கு ஒருவித பக்தி விசுவாசம் ஏற்பட்டது. மிகுந்த சிரத்தையோடு பாடங்களை அவன் சொல்லிக் கொடுத்தான். மாஜினியும், தன்னுடைய பாடங்களைப் படித்து ஒப்புவிப்பதில் ஒருவித உற்சாகத்தைக் காட்டினான். கிரேக்க, ரோம இதிகாசங்களையும், முக்கியமான காவியங்களையும், ஏறக்குறைய பத்து வயதுக்குள்ளேயே இவன் படித்து முடித்துவிட்டான். மேற்சொன்ன இதிகாசங்களிலே வரும் வீரர்களுடைய வாழ்க்கை, அவர்கள் காலத்திலிருந்த அரசியல் நிலைமை முதலியனவும் இவன் பசு மனத்தில் நன்றாகப் பதிந்தன. இங்ஙனம் தன் ஆசிரியனிடம் படித்து வந்ததோடு இவன் திருப்தியடையவில்லை. வீட்டின் எந்த மூலையில் என்ன புத்தகங்கள் இருந்தாலும், என்ன பழைய பத்திரிகைகள் இருந்தாலும் அவற்றையெல்லாம் பொறுக்கி யெடுத்துப் படிப்பான். இவனுடைய தகப்பன், அரசியல் விஷயத்தில் குடியரசு முறையை ஆதரிக்கிறவன். இதனால், பிரான்சில்

வெளியான ஒரு குடியரசுக் கட்சிப் பத்திரிகைக்குச் சந்தாசெலுத்தி வரவழைத்துக் கொண்டிருந்தான். ஆனால் இது ரகசியமாகவே வந்துகொண்டிருந்தது. ஏனென்றால் அரசாங்க ஒற்றர்களின் கண்களுக்குப் பட்டுவிட்டால் குடும்பத்திற்கே ஆபத்தல்லவா? மாஜினியின் தந்தை—இவன் பெயர் ஜியாக்கோமோ மாஜினி[1] — இந்தப் பத்திரிகை இதழ்களை, தனது வைத்தியப் புத்தகங்களுக்குள் ரகசியமாக வைத்துப் படிப்பான். படித்து முடித்த பிறகு, இவற்றைச் சுருட்டி எங்கேனும் மூலையில் குப்பை கூளங்களோடு சேர்த்துப் போட்டு விடுவான். யாரும் கண்டுபிடிக்க மாட்டார்களென்பது இவன் எண்ணம். ஆனால் பாலிய மாஜினியோ, வீட்டில் தந்தையில்லாத சமயம் பார்த்து இந்தப் பத்திரிகையின் பழைய இதழ்களை யெல்லாம் பொறுக்கி யெடுத்துவந்து ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு மணிக் கணக்காகப் படித்துக் கொண்டிருப்பான். அநேக சந்தர்ப்பங்களில் பொழுது போவதே இவனுக்குத் தெரியாது. பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்ற வரலாறு, அதற்குக் காரணமாயிருந்த வர்கள் யாரார், அஃது ஏன் தோல்வியடைந்தது, மீண்டும் பிரான்சில் எப்படி சுயேச்சாதிகார ஆட்சி ஏற்பட்டது முதலிய விவரங்களையெல்லாம் இந்தப் பத்திரிகை இதழ்களில் படித்துத் தெரிந்துகொண் டான். இங்ஙனமே, இலக்கிய சம்பந்தமான புத்த கங்கள் ஏதேனும் தகப்பனார் மூலமாகக் கிடைத்தால் அவற்றை உற்சாகத்துடன் படித்து முடித்துத் திருப்பிக் கொடுத்து விடுவான். பொதுவாக இவனுக்குச் சிறு வயதிலிருந்தே இலக்கியத்திலும் சரித்திரத்திலும் ஒரு விசேஷ சிரத்தை இருந்து வந்தது. ஆனால், இந்தப் புஸ்தகப் படிப்பிலே மட்டும் இவன் திருப்திகொள்ள

1 Giocomo Mazzini.

வில்லை. பிறர் வாயிலிருந்து ஏதேனும் புதிய விஷயங்கள் வெளிவருமானல் அவற்றை இவன் சிரத்தையோடு கேட்பான். இதற்கான வசதிகள் இவனுக்கு வீட்டில் நிறையக் கிடைத்தன. இவனுடைய தகப்பன், எல்லாரிடத்திலும் தாராளமாகப் பழகும் சுபாவமுடையவன். ஆதலால் இவனுக்கு நண்பர்கள் அதிகம். இவர்கள் அடிக்கடி இவன் வீட்டுக்கு வந்து அரசியல் பிரச்னைகளைப்பற்றி, சிறப்பாகக் குடியரசு முறையின் தாரதம்மியங்களைப் பற்றிச் சம்பாஷணை செய்வார்கள். இவற்றையெல்லாம் மாஜினி கவனமாகக் கேட்டுக்கொண்டிருப்பான்.

மாஜினிக்கு வயது பத்து. அந்த வருஷம் நெப்போலியனுடைய ஏகாதிபத்தியம் விழுந்து பட்டது. இந்த வீழ்ச்சியின் விளைவு ஜினேவாவில் பிரத்தியட்ச ரூபமாகக் கொண்டுவரப்பட்டது. எப்படியென்றுல், இந்த வருஷத்தில்தான், ஐரோப்பிய வல்லரசுகளின் அங்கீகாரத்தின் பேரில், லிகூரியா[1] மகாணத்திலுள்ள ஜினேவா நகரத்தை, பீட்மாண்ட் அரசன், தன் சுவாதீனப்படுத்திக் கொண்டுவிட்டான். ஜினேவா வாசிகளின் சம்மதா சம்மதத்தைப் பற்றி யாரும் கவலை கொள்ளவில்லை. இது, ஜினேவா வாசிகளுக்கு மிகவும் வெறுப்பை உண்டுபண்ணியது. இவைகளைப்பற்றி யெல்லாம் மாஜினி வீட்டில் அடிக்கடி பேச்சுக்கள் நடைபெற்றன. மாஜினியின் உணர்ச்சி நிரம்பிய உள்ளத்தில் இவை மெதுவான ஒரு புரட்சியை உண்டு பண்ணுமலிருக்குமா?

பத்து வயதுக்கு மேல், மாஜினி, உயர்தரப் படிப்புக்காக ஜினேவா சர்வகலாசாலைக்கு அனுப்பப்

1 Liguria. இது தனிக் குடியரசா யிருந்தது.

பட்டான். பதினன்காவது வயதில் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினன். இவனுடைய சகோதர மாணக்கர்கள் இவனிடத்தில் ஒரு விசேஷ பிரீதியுடன் நடந்து வந்தார்கள். ஆனல், ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், இவன் ஒரு தொந்தரவு கொடுக்கும் மாணக் கனக இருந்தான். சர்வ கலாசாலையில் படிக்கிற மாணக்கர்கள் என்று சொன்னல் அவர்கள் சில சம்பிரதாயங்களை அனுஷ்டிக்க வேண்டும். உதாரண மாக, அவர்கள் தினந்தோறும் தேவாலயத்திற்குச் சென்று வரவேண்டும்; மீசை வைத்துக்கொள்ளக் கூடாது. மாஜினி இவைகளுக்கெல்லாம் விரோதி. தேவாலயத்திற்குச் செல்லக்கூடாதென்பது மாஜினி யின் எண்ணமல்ல; ஆனல் அப்படிச் செல்லவேண்டு மென்று கட்டாயப்படுத்தினல் அந்தக் கட்டாயத்திற் குட்படக் கூடாதென்பதுதான் இவன் கட்சி. ஆசிரியர் களும் இவனை முதலில் கண்டித்துப் பார்த்தார்கள். பயனில்லை. எனவே, இவனுடைய கீழ்ப்படியாத் தன்மையைக் கண்டுகொள்ளாதவர்கள் போலிருந்து விட்டார்கள்.

ஆசிரியர்களின் விருப்பு வெறுப்புக்களிலிருந்து இவன் எவ்வளவுக் கெவ்வளவு விலகி யிருந்தானே அவ்வளவுக் கவ்வளவு தன் சகோதர மாணக்கர்களின் நெருக்கமான நட்புக்காளாயினன். வெகு சீக்கிரத்தில், பரிசுத்த வாழ்க்கை நடத்திய, அன்பு நிறைந்த, தீவிர மனப்போக்குள்ள மாணக்கர்களனைவருக்கும் தலைவனயினன்.

மாஜினி, வயதில் சிறியவனயிருந்த போதிலும், இருதய விசாலத்தில் மிகப் பெரியவனயிருந்தான், மற்றவர்கள் கஷ்டப்படுவதைப் பார்த்து இவனல் சகிக்கவே முடியாது. இவனுடைய இந்தக் காலத்து

வாழ்க்கையைப் பற்றி இவனுடைய சகோதர மாணுக்கனொருவன் பின் வருமாறு எழுதுகிறுன் :—

"மாஜினி, எளிய பழக்கவழக்கங்களையுடையவன்; அனுவசியமாகச் செலவழிக்க மாட்டான்; எதிலும் சிக்கனமாக இருப்பான். ஆனால், தன்னைச் சுற்றியுள்ளவர்களுடைய தேவைகளை அறிந்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வான். சில சமயங்களில், இந்த உதவி செய்யும் வழக்கத்தை அதீதமாகவும் கொண்டுபோய் விடுவான். தன்னுடைய புஸ்தகங்களைக் கொடுப்பான்; தான் மிகுத்திவைத்திருக்கும் பணத்தைக் கொடுப்பான்; இவையெல்லாம் போதாதென்று தனது உடைகளையும் கொடுத்துவிடுவான்."

இவனுடைய இந்த மாதிரியான தாராள மனப்பான்மையும், பரிசுத்த வாழ்க்கையும் மட்டுமே, இவனுக்கு, மாணுக்கருலகத்தில் முதல் ஸ்தானத்தைக் கொடுக்கவில்லை. இவனுடைய சீல சுபாவந்தான் இவனுக்கு முக்கிய ஸ்தானத்தை அளித்தது. ஆசிரியர்கள், தங்களுடைய சொந்த வெறுப்புக்களை வைத்துக்கொண்டு, எந்த மாணுக்கனுக்கேனும் கெடுதல் செய்தால் அதற்காக இவன் போராடுவான்; பரிந்து பேசுவான். நீதி கிடைக்கும் பொருட்டு எந்த விதமான துன்பங்களையும் ஏற்றுக்கொள்வான்; அவமானங்களைச் சகிப்பான். நட்பைக் காப்பாற்றிக் கொள்வதிலே அதிக சிரத்தையுடையவன். பரிசுத்த ஆத்மா. தான் என்பதை அறியாதவன். அச்சம் என்பது அணுவளவும் இவனுக்குத் தெரியாது. இத்தகைய குண மேம்பாடுகள் இவனிடம் இருந்ததனுல்தான், மாணுக்கர்கள், தங்களை யறியாமலே இவனை ஒரு தலைவனுக ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். இவனுடைய எதிரில், கேவலமான வார்த்தை

களைக்கூட பேச மாட்டார்கள். அவ்வளவு மரியாதை இவனிடத்தில்.

இப்படி யிருக்கையில், ஒரு நாள், இவனுடைய பிற்கால வாழ்க்கை இன்னபடி இருக்கவேண்டுமென் பதை நிர்ணயித்துக் கொடுக்கிறமாதிரி ஒரு சம்பவம் நடைபெற்றது. இத்தாலிய மாதாவின் மறைமுகமான அழைப்புதான் அது.

மாஜினியினுடைய பதினாருவது வயது நடக்கிறது. 1821-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் ஒரு ஞாயிற்றுக் கிழமை, வழக்கமாகச் சந்தை கூடுகிற நாள். காலை நேரம். மாஜினி, இவனுடைய தாயார், வேறொரு நண்பர் ஆகிய மூவரும் ஒரு தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். இவர்களைப் பின்தொடர்ந்து ஒருவன் வந்தான். மிருந்த உயரம்; கருமையான மயிரடர்ந்த தாடி; ஜீவகளையோடு கூடிய முகம்; தீட்சண்யமான பார்வை. இந்த லட்சணங்களோடு கூடிய அவன், இவர்களருகில் வந்து ஒரு வெள்ளைக் கைக்குட்டையை விரித்து "சட்ட விரோதிகளான இத்தாலியர்களுக்கு" என்ருன். இவனுடைய தாயாரும், நண்பரும் சில காசுகளை மேற்படி கைக் குட்டையில் போட்டார்கள். அவன் வந்தனஞ் செலுத்தி விட்டு, உடனே வேறு சிலரிடம் மேற்சொன்ன மாதிரி யாகச் சொல்லிக்கொண்டு கைக்குட்டையை விரித்தான்.

மாஜினி: அம்மா! இவன் யார்? இவனுடைய முகத்தோற்றம், கம்பீரப் பார்வை முதலியன என்னை வசியப்படுத்தி விட்டனவே. ஏன் இவன் பிச்சை யெடுக்க வேண்டும்?

**தாயார்:** குழந்தாய்! சில நாட்களுக்கு முன்னர் பீட்மாண்ட் பிரதேசத்தில், அரசாங்கத்தின் சுயேச்சாதிகாரத்தை எதிர்த்து, கார்போனரிகள் ஒரு புரட்சி செய்தார்கள், ஆனல் அரசாங்கத்தார், இதனை மிகக் கடுமையாக அடக்கிவிட்டார்கள். அந்த அடக்கு முறைக்குத் தப்பி ஓடி வந்து விட்டனர் சிலர். அவர்களில் ஒருவன் இவன்.

**மாஜினி:** ஏன் இவர்களுடைய புரட்சி தோல்வியுற்றது?

**தாயார்:** சரியான முன்னேற்பாடும் ஒழுங்கான தலைமையும் இல்லாததுதான் காரணம்.

**மாஜினி:** இவர்கள் ஏன் இந்த ஜினேவாவுக்கு வரவேண்டும்?

**தாயார்:** கையிலே காசில்லாமல் ஓடிவந்துவிட்ட இவர்கள், அதிகாரிகள் வசத்தில் சிக்கிக் கொள்வதற்கு முன்னர், ஸ்பெயின் முதலிய அந்நிய நாடுகளுக்கு ஓடிவிடலாமே யென்பதற்காக, துறைமுகப் பட்டினமாகிய இந்த ஜினேவாவுக்கு வந்திருக்கிருர்கள். கப்பல் செலவுக்காகப் பணம் வசூலிக்கிருர்கள்.

இந்தச் சம்பவம் மாஜினியின் மனத்தில் பெரிய மாற்றத்தை உண்டுபண்ணிவிட்டது. தனது தாய் நாட்டை அந்நிய ஆதிக்கத்தினின்று விடுவிக்கும் பொருட்டுத் தன் வாழ்க்கையை அர்ப்பணஞ் செய்து விடுவதென்று தீர்மானித்தான். துணி விரித்துப் பிச்சையெடுத்த அந்த உயர்ந்த மனிதனைப்போல் இன்னும் எத்தனைபேர், தாய் நாட்டின் சுதந்திரத்திற்காகத் தங்கள் வாழ்க்கையைத் துறந்துவிட்டு ஓடி வந்திருக்கிருர்களோ, இன்னும் எத்தனை பேர் சிறை

யிலே அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிருர்களோ என்றெல்லாம் அடிக்கடி சிந்தனை செய்தான் மாஜினி. இராக் காலங்களில் இவனுக்குச் சரியான தூக்கம் வரவில்லை. அந்தச் சுதந்திர வீரர்களைப்பற்றி அடிக்கடி கனவு கண்டான். இவனுடைய சகோதர மாணுக்கர்கள் இவனிடத்தில் திடீரென்று ஒருவித மாறுதலைக் கண்டனர். தாய் நாட்டின் நிலைமையைக் குறித்துத் துக்கப்படுவதற்கு அறிகுறியாக, இந்த நாட்களிலிருந்து கருப்பு உடைகளைத் தரிக்க ஆரம்பித்தான். ஆயுள் பரியந்தம் அந்தப் பழக்கத்தை இவன் விடவில்லை.

சிறிது காலம் வரை ஏக்கம் பிடித்தவன் போலிருந்த இவன், பின்னர் பழைய நிலைமைக்கு வந்தான். முன்போல் புத்தகங்களை ஊக்கத்துடன் படிக்க ஆரம்பித்தான். தந்தையின் விருப்பப்படி வைத்தியப் பரீட்சைக்குப் படிக்கத் தொடங்கினுன். ஆனுல், சத்திர சிகிச்சை பாடத்தை, அதாவது 'ஆபரேஷன்' செய்யும் பாடத்தைப் பயிலுவதற்கு 'ஆபரேஷன்' அறைக்குச் சென்ற முதல் நாளே மூர்ச்சையாகி விட்டான். இவன் தந்தைக்கு இது மிகவும் வருத்தந்தான். தனது தொழிலை, மகன் பின்பற்ற முடியவில்லையல்லவா? ஆயினும் என்ன செய்வது? சட்டப் பரீட்சைக்குப் படிக்குமாறு ஏற்பாடு செய்தான். ஆனுல், மாஜினிக்கு இந்தப் படிப்பிலும் உற்சாகமில்லை. ஒவ்வொரு விஷயத்திற்கும் காரணமென்ன வென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலுடைய ஒருவனுக்கு, சாரமற்ற சட்ட வியாக்கியானத்தின் மீது மனஞ்செல்லுமா? ஆயினும், மாஜினி, தன் தகப்பனுக்கு மறுபடியும் வருத்தமுண்டாகாதபடி சட்டப் பரீட்சைகளில் நன்ருகத் தேறி வந்தான். வக்கீல் தொழிலை

நடத்த அதிகாரப் பத்திரமும் பெற்றுவிட்டான். என்றாலும், இவனுடைய ருசியெல்லாம் கவிதையிலும் சரித்திரத்திலுமே சென்றது. இலக்கியத்திலும் அரசியலிலும் சிரத்தை கொண்ட சில நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு ஒரு சங்கம் ஆரம்பித்தான். அரசாங்கத்தினரால் தடுக்கப்பட்டிருந்த பல நூல்களை இவன் ரகசியமாக வரவழைத்து, நண்பர்களை படிக்கச் செய்தான். இவனும், இத்தாலிய, பிரெஞ்சு, ஆங்கில பாஷைகளில் வெளியான பல காவியங்களையும் சரித்திரங்களையும் உற்சாகத்தோடு படித்து வந்தான். இத்தாலிய மகான் கவிஞனாகிய தாந்தேயினிடத்திலும்[1] ஆங்கில மகான் கவிஞனாகிய பைரனிடத்திலும்[2] இவனுக்கு விசேஷ பக்தி சிரத்தை ஏற்பட்டு விட்டது. இந்த பக்தி சிரத்தை அதிகமாக அதிகமாக, தாய் நாட்டின்மீது இவன் கொண்டிருந்த பக்தி சிரத்தையும் அதிகமாகியது. இந்தக் காலத்தில் இவன் இருதயத்திலிருந்து முகிழ்த்த தேசீய எண்ணங்கள், இலக்கியப் போர்வையைப் போர்த்திக்கொண்டு, ஜினோவாவில் வெளியான சில பத்திரிகைகளில் கட்டுரைகளாக வெளிவந்தன. அரசியலோடும் சமுதாயத்தோடும் இணைந்து செல்லாத எந்த இலக்கியத்திற்கும் முக்கிய ஸ்தானம் கொடுக்கக் கூடாதென்பது இவன் கட்சி. இப்படி இவன், பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதி வந்ததோடு, வக்கீல் தொழிலையும் நடத்தி வந்தான். ஆனால் காவிய ரசனையில் ஈடுபட்டுள்ள மனமும், வக்கீல் மனமும் ஒன்று சேருமா? எனவே, வக்கீல் தொழிலில் மனப்பூர்வமாக ஈடுபட இவனால் முடியவில்லை. ஏழைகளின் சார்பாக நியாய ஸ்தலங்களில் ஆஜராவான். எவ்வித கட்டணமும் வாங்கிக் கொள்ள மாட்டான். ஆனால் நீதிக்கு மன்றாடுவான்.

---

1 Dante 1265—1321. 2 Byron 1788—1824.

கட்சிக்காரர்கள் இவனிடத்தில் அதிகமாக வந்தார்கள்; வருமானந்தான் கிடையாது.

இப்படி மனமில்லாத தொழிலில் நீண்ட காலம் ஈடுபட்டிருப்பதை இவன் மனச்சாட்சி அங்கீகரிக்குமா? எனவே, அரசியலில் தீவிரமாக ஈடுபடுவதென்று நிச்சயித்தான். எப்படி ஈடுபடுவது? கார்போனரி ரகசியச் சங்கமொன்றுதான் உருப்படியான ஓர் அரசியல் ஸ்தாபனமாயிருந்தது. ஆனல், சுதந்திரத்தைப்பற்றி நிர்ணயமான ஓர் அபிப்பிராயமில்லாத சில உற்சாகிகளின் கூட்டமாக இஃது இருந்தது. இவர்கள், பிரான்சின் உதவி பெற்று இத்தலிக்கு விமோசனம் அளிக்கப் பார்த்தார்கள். இவர்கள், அர்த்தமில்லாத சில சடங்குகளை அனுஷ்டித்து சுதந்திரத்தையடைந்து விடலாமென்று நம்பினார்கள். இவர்கள், தங்கள் சங்கத்தில் இளைஞர்கள் வந்து சேருவதை அவ்வளவாக விரும்பவில்லை. ஆயினும் மாஜினி மிகுந்த சிரமத்தின் பேரில், ஜினோவா கிளைச் சங்கத்தில் அங்கத்தினனாகச் சேர்ந்துகொண்டான். இவனுக்குக் கீழான ஒரு ஸ்தானம் கொடுத்தார்கள். மேலோர்களின் உத்தரவுகளை இவன் எவ்விதக் கேள்வியுமின்றி நிறைவேற்றி வந்தான். சில இடங்களுக்கு, பிரசார வேலைக்கு அனுப்பப்பட்டான். இந்தப் பிரசார வேலையை இவன் வெற்றிகரமாகச் செய்து முடித்தான். சிலபேரை கார்போனரி சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்த்தான். இப்படி இவன் புதிய அங்கத்தினர்களைச் சேர்த்ததன் நோக்கம், தனக்கென்று ஒரு கட்சியை வகுத்துக் கொண்டு நாளாவட்டத்தில் பழைய அங்கத்தினர்களையும் அவர்களுடைய அழுகிப்போன சித்தாந்தங்களையும் அப்புறப்படுத்திவிட வேண்டுமென்பதுதான். அங்கத்தினர்கள் சேர்ப்பதில் இவன் ஓரளவு வெற்றி பெற்ருன். தான் சேர்த்த புதிய அங்கத்தினர்கள்

விஷயத்தில், வழக்கமாக அனுஷ்டிக்கவேண்டிய சடங்குகளை இவன் அனுஷ்டிக்கவில்லை. புரட்சி தொடங்கப் பட்டால் அப்பொழுது எவ்விதத் தயக்கமுமின்றி அவரவருக்கிடப்பெற்ற கடமையைச் செய்யவேண்டுமென்ற பிரதிக்ஞையை மட்டும் வாங்கிக் கொண்டான். இங்ஙனம் தான் சேர்த்த அங்கத்தினர்களின் உதவி கொண்டு, ஒரு புரட்சியை நடத்துவதற்கான சில முன்னேற்பாடுகளையும் செய்தான். இந்தச் சமயத்தில் —அதாவது 1830-ஆம் வருஷம் ஜுலை மாதம்— பிரான்சில், அப்பொழுது ஆண்டுகொண்டிருந்த பத்தாவது சார்லஸ்[1] மன்னனுடைய கொடுங்கோலாட்சிக்கு விரோதமாக ஒரு ஜனப்புரட்சி நடைபெற்றது. இது, மற்ற நாடுகளிலுள்ள தீவிரவாதிகளுக்கு ஓர் உற்சாகத்தையும், தங்கள் நாட்டில் புரட்சியை உண்டுபண்ணுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தையும் அளித்தது. ஆனால் இத்தலியில் ஒரு பெரிய புரட்சியை நடத்துவதானால், அஃது இந்த கார்போனரி சங்கத்தினால் முடியாதென்பது மாஜினிக்கு நன்ருகத் தெரியும். வெற்றிகரமான ஒரு புரட்சியை நடத்துவதற்கு, உயர்ந்த லட்சியத்தோடு கூடிய ஒரு புதிய ஸ்தாபனம் தேவையென்பதை இவன் நன்கு அறிந்து கொண்டும், அந்தப் புதிய ஸ்தாபனத்தை அமைக்கும் பொறுப்பு தன்னுடையதே யென்பதை உணர்ந்து கொண்டு மிருந்தான். இதுவே பின்னர் 'யௌவன இத்தலி'[2] சங்கமாகப் பரிணமித்தது.

இங்ஙனம் இவன் பழைய ஸ்தாபனத்திலிருந்து கொண்டே புதிய ஸ்தாபனமொன்றுக்கு அடிகோலிக் கொண்டிருக்கையில், போலீஸ் அதிகாரிகளின்

---

1 Charles X 1757—1836.

2 Young Italy. (La Giovana Italia)

திருஷ்டி இவன்மீது பட்டுவிட்டது. இவனுடைய நடவடிக்கைகள் அவர்களுக்கு ஒருவித சந்தேகத்தை உண்டுபண்ணி வந்தன. எனவே, இவனைத் தொடர்ந்து கண்காணித்து வந்தார்கள். கடைசியில் 1830-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் ஒரு நாள், தன்கட்சிக்கு ஆள் சேர்த்துக்கொண்டிருக்கையில் இவனைக் கைது செய்து, ஜினோவாவுக்கு மேற்கே கடற்கரையோரமாகவுள்ள ஸாவோனா[1] என்ற நகரத்திலிருக்கும் சிறைச்சாலைக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள். அப்பொழுது இவனுக்கு வயது இருபத்தைந்து.

---

1 Savona.

# 3. சிறை

**ஸா**வோனு சிறை அதிகாரிகள், மாஜினிக்கு, படிப்பதற்கு பைபிள், பைரன் இயற்றிய கவிதைகள், டாஸிட்டஸ்[1] என்ற ரோம சரித்திராசிரியன் எழுதிய நூல்கள் ஆகிய இவற்றை மட்டும் கொடுத்திருந்தார்கள். மாஜினி, இவற்றைப் படிப்பான்; எதிரிலிருக்கும் சமுத்திரத்தை நோக்குவான்; மேலேயிருக்கும் ஆகாயத்தைப் பார்ப்பான்; தனது தாய் நாட்டின் நிலைமையைக் குறித்துப் பெருமூச்சு விடுவான்; அதற்கு விமோசனம் எப்படி என்பதைக் குறித்து எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணுவான். இந்த எண்ணத்தின் ஆழத்திலிருந்துதான் 'யௌவன இத்தலி' என்ற புதிய அரசியல் சங்கத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற தீர்மானம் உதித்தது. இந்தச் சங்கத்திற்கு வேண்டிய திட்டங்களையும் சிறைச்சாலையிலேயே வகுத்துக்கொண்டான். இதைப்பற்றி மாஜினி பின்வருமாறு கூறுகிறான் :—

"ஸாவோனு சிறைச் சாலையில் நானிருந்த சில மாதங்களில்தான், 'யௌவன இத்தலி' என்ற சங்கத்துக்கான திட்டங்கள் என் மனத்திற்குள் உருக்கொண்டன. எந்தெந்தக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு கட்சி ஸ்தாபனத்தை அமைப்பது, என்னென்ன நோக்கத்தைக் கொண்டு அஃது உழைப்பது,—அந்த நோக்கத்தை மட்டும் பகிரங்கமாக வெளியிட வேண்டுமென்பது என் உத்தேசம்.—என்னென்ன முறைகளைக் கொண்டு சங்கத்தை

1 Tacitus. உத்தேச காலம் கி. பி. முதல் நூற்றாண்டு.

ஸ்தாபிப்பது, இந்த விஷயத்தில் எனக்கு உதவி செய்ய யாராரைப் பொறுக்கி எடுப்பது, ஐரோப்பா விலுள்ள மற்றப் புரட்சி சங்கங்களோடு இதனை எப்படி இணைப்பது என்பவைகளைப்பற்றி யெல்லாம் நான் தீர்க்காலோசனை செய்தேன்.

நாங்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாயிருந் தோம். எல்லோரும் வாலிபர்கள். எங்களுக்கிருந்த பொருளாதாரமும் செல்வாக்கும் மிகச் சொற்பம். எந்த இத்தாலிய உள்ளமானது இப்பொழுது மௌனத்திலே ஆழ்ந்து கிடக்கிறதோ, எந்த இத்தா லிய உள்ளமானது முற்காலத்துச் சரித்திரத்திலும், எங்களுடைய எதிர்கால திருஷ்டியிலும் புலனாகிக் கொண்டிருக்கிறதோ, அந்த இத்தாலிய உள்ளத்தின் உணர்ச்சிகளுக்கும். மனப்போக்குகளுக்கும் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டியது எங்களுடைய முக்கிய கடமை என்பதை நான் நன்கு நம்பினேன். அந்தச் சுய உணர்ச்சிகள் யாவை, மனப்போக்குகள் யாவை என்பதைச் சரியாகத் தெரிந்து பாராட்டு வதிலேதான் எங்களுடைய பலம் இருக்க வேண்டும்.

எல்லாத் தேசீய இயக்கங்களும், சாதாரண மனிதர்களிடத்திலிருந்துதான் ஆரம்பித்திருக்கின்றன. அவர்களுக்கு, அவர்களுடைய நம்பிக்கை, மனோ உறுதி ஆகிய இரண்டுதான் பக்க பலமாயிருந்திருக்கின்றன. இந்த நம்பிக்கையும் மனோ உறுதியுமுடையவர்கள், வழியிலே தோன்றும் இடையூறுகளையோ, காலத் தையோ எண்ணிப் பார்த்துக்கொண்டிருக்க மாட் டார்கள். இப்படிப்பட்டவர்கள் முன்னேறிச் செல்கிற போது, வாழ்க்கைச் சௌகரியங்களும் சமுதாயச் செல்வாக்கு முடையவர்கள் இவர்களைப் பின் தொடர்ந்து வருகிறார்கள். ஒன்று, அந்த இயக்கத்தை

ஆதரித்து அதனைத் தொடர்ந்து நடத்தவாவது வந்து சேர்கிறார்கள்; அல்லது அந்த இயக்கத்தை, அதன் ஆதி நோக்கத்திலிருந்து திருப்பிவிடவாவது செய்கிறார்கள்.

இந்த 'யௌவன இத்தலி' சங்கத்தை ஸ்தாபிக்கிற விஷயத்தில், எனக்கு எவ்வித அரசியல் நோக்கமும் இல்லை. தனித் தனியாகப் பிரிக்கப்பட்டும், தாழ்த்தப்பட்டும், ஒடுக்கப்பட்டும் போயிருக்கிற ஒரு ஜாதியாரை மட்டும், அதாவது இத்தாலிய ஜாதியாரை மட்டும், கைதூக்கிவிட வேண்டுமென்பது என் எண்ணமில்லை. ஐரோப்பாவிலுள்ள எல்லா ஜாதியினரிடத்திலும், ஒரு புதிய வாழ்வை உண்டுபண்ணுவதற்கும், ஸ்தாபிப்பதற்கும் இத்தலி ஒரு கருவியாக இருக்க வேண்டுமென்பதுவே என் ஆசை.

∴ ∴ ∴

இந்தக் காலத்தில், ரோமாபுரியைத் தொழுது போற்றுவதென்பது, என் சுபாவத்திலேயே ஒன்றாகி விட்டது. உலகமெல்லாம் ஒன்றுபட்ட ஒரு குடும்பம், உலகனைத்திலும் ஒரே ஜீவன்தான் ஊடுருவிச் செல்கிறது என்ற தத்துவங்களை, இந்த ரோமாபுரிதான் இரண்டு முறை விவரித்துக் காட்டியது. மற்ற ஜாதியினர், தங்களுடைய அற்ப நோக்கத்தை முடித்துக் கொண்டு, பூலோகத்திலிருந்து சீக்கிரத்தில் மறைந்து விட்டார்கள். உலகத்திற்கு வழி காட்டி அதனை நடத்திச் செல்லக்கூடிய சந்தர்ப்பங்கள், ரோமாபுரி ஒன்றுக்குத்தான் இரண்டு முறை வாய்த்திருக்கின்றன. அங்கே, அந்த ரோமாபுரியிலே, வாழ்வென்பது சாசுவதமானது. மரணமென்பது அங்குத்தெரியாது. அதனுடைய நாகரிகம், கிரேக்க நாகரிகத்திற்கு

முற்பட்டது. ஒரு சமயம், சீஸர்களுடைய தலைமையின் கீழ், அஃது, உலகத்தின் பல பாகங்களுக்கும் தன் கழுகுக் கொடியைத் தூக்கிச் சென்றது. அந்தக் கொடியோடு, சுதந்திர எண்ணத்தையும் எடுத்துச் சென்றது. இன்னொரு சமயம், அதாவது ரோமாபுரியானது உயிருள்ளவர்களுடைய சமாதிக் குழியாகி விட்டது என்று மற்றவர்கள் துக்கப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், அது மீண்டும் தலை தூக்கி எழுந்தது, இதற்குக் காரணமாயிருந்தவர்கள் போப் பரசர்கள். இவர்கள் காலத்திலே, ரோமாபுரியை, இப்பொழுது எவ்வளவு கேவலமாக எல்லோரும் மதித்து வருகிறார்களோ அவ்வளவு உயர்வாக எல்லோரும் போற்றி வந்தார்கள். உலக ஒற்றுமையின் மையமாக அப்பொழுதைய ரோமாபுரி இருந்தது. அப்பொழுதைய தலைவர்கள் உரிமைகளுக்குப் பதில் கடமைகளையே அதிகமாக வற்புறுத்தினார்கள். இந்தக் கடமைகளை வற்புறுத்தியதன் மூலமாக, மனிதர்களுக்கிடையே சமத்துவ எண்ணத்தை வளர்த்தார்கள்.

புதிதான ஒரு ரோமாபுரி, இத்தாலிய மகாஜனங்களுடைய ரோமாபுரி, மூன்றாவது முறையாக ஏன் மீண்டும் தோன்றக் கூடாது? மீண்டும் ஏன் உலகத்திலே மகத்தானதோர் ஒற்றுமையை ஸ்தாபிக்கக் கூடாது? ஆம்; அப்படிப்பட்ட ஒரு ரோமாபுரியினுடைய வருகையின் சூசகங்களை இப்பொழுது நான் காண்கிறேன். அந்த ரோமாபுரியானது இகலோகத்தையும் பரலோகத்தையும், உரிமையையும் கடமையையும், தனிப்பட்ட மனிதர்களையும் ஜன சமுதாயத்தையும் ஐக்கியப்படுத்துவதா யிருக்க வேண்டும்.''

இப்படிப்பட்ட லட்சியம் வாய்ந்த ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்துவதற்கான திட்டங்களைத் தயாரித்துக்கொண்டு, மாஜினி, சிறையிலிருந்து வெளிவந்தான். அந்தக் காலத்து இத்தலியை நாம் பார்ப்போமானல் மாஜினியின் இந்தத் திட்டம் எவ்வளவு மகத்தானது, எவ்வளவு துணிச்சலானது என்பது தெரியவரும். அப்பொழுதைய இத்தலி, ஆம், சாம்ராஜ்ய இத்தலி, துண்டு துண்டு நாடுகளாகச் சிதறிக் கிடந்தது. பாஷை, சுபாவம் முதலியவற்றில் வித்தியாசப்பட்ட பல ஜாதியினர் போல் இத்தாலியர்கள் ஒற்றுமையின்றி வாழ்ந்து வந்தார்கள். நாடெங்கணும் ரகசியச் சங்கங்கள்; ஆனல் அவைகளுக்குச் சமதையான அரசாங்க ஒற்றர்கள். "ஆஸ்திரியாவைத் தங்கள் ரொட்டியிலே கலந்து சாப்பிட்டு வந்த" ஏழை ஜனங்கள். இவர்களை, அந்நிய ஆதிக்கமானது, "நமது வாழ்வை, நமது நாட்டை, நமது பெயரை, நமது புகழை, நமது கலைஞானத்தை, நமது சுக சௌக்கியத்தைப் பறித்துக்கொண்டுவிட்ட" ஆஸ்திரிய ஏகாதிபத்தியமானது, கேளிக் கூத்துக்கள், தமாஷாக்கள், தருமங்கள் முதலியவற்றிலே ஈடுபடுத்தி மயங்க வைத்திருந்தது. கிறிஸ்தவ மதாசாரியர்களை ஜனங்கள் எப்படிப் போற்றி வந்தார்களென்ருல், அந்த ஆசாரியர்களின் சந்நிதானத்திலிருந்து எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக எட்டிப் போகிருர்களோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக அந்த ஆசாரியர்களைக் கௌரவித்து வந்தார்கள். இப்படிப்பட்ட மோசமான நிலைமையிலிருந்த தன் தாய்நாட்டை, சிறையிலிருந்து வெளிவந்த மாஜினி தன் அகக்கண் முன் நிறுத்திப் பார்த்தான். புறக் கண்ணில் துக்க நீர் வடித்தான். கதறினன் :—

"எனது நாட்டு மக்கள், என் கண் முன்னே ஐயோ! எப்படி வரிசை வரிசையாகச் செல்கிறார்கள்! இழி தகைமையையும் அரசியல் அடிமைத் தனத்தையும் அடையாளமாகத் தரித்துக்கொண்டு செல்கிறார்கள்; கந்தையுடுத்திச் செல்கிறார்கள்; பசியோடு செல்கிறார்கள். பணக்காரர்கள், தங்கள் மேஜையிலிருந்து சில துண்டு துணுக்குகளைத் துச்சமாக வீசி எறிகிறார்கள். அவற்றையும், அவர்கள் புண்பட்ட மனத்தோடு பொறுக்கி யெடுத்துத் தின்கிறார்கள்; அல்லது மிருகத்தனமான ஒரு வெறியாட்டிலே, அல்லது அதிக கோபத்தினால் விளைகிற கோரச் சிரிப்பிலே அவர்கள் தங்களை மறந்து கிடக்கிறார்கள். அவர்களனுபவிக்கிற சந்தோஷம் காட்டுமிராண்டித்தனமான சந்தோஷம். ஆனால் அவர்களுடைய முகத்திலே, அதிக துக்கத்தினால் மிருகத்தனமாகிவிட்ட அவர்களுடைய முகத்திலே நமக்கு என்ன லட்சியம் உண்டோ அதே லட்சியமாகிற கடவுளின் விரல் அடையாளத்தை நான் காண்கிறேன். அப்படிக் காண்பதிலே, எதிர்காலத்தையும் பார்க்கிறேன். அப்பொழுது எனது நாட்டு ஜனங்கள் எவ்வளவு கம்பீரமாகக் காட்சியளிக்கிறார்கள்! சகோதரத்துவத்திலும், சமத்துவத்திலும், அன்பிலும் அவர்கள் ஒன்றுபட்டவர்களாகப் பிரகாசிக்கிறார்கள். அவர்களை. அந்த வருங்கால சந்ததியாரை, இழிதகைமையானது, தாற்றுக்கோல் போட்டுத் தள்ளிக்கொண்டு போகாது. அவர்கள், உரிமைக்கும் கடமைக்கும் வசப்பட்டுச் செல்வார்கள். அந்தக் காட்சியை நான் தரிசிக்கிற போது, எனது இருதயமானது, இன்றைய நிலைமைக்கு இரங்குகிறது; வருங்காலத்தின் புகழைப் பாடுகிறது."

ஸாவோனு சிறையிலிருந்து மாஜினி வெளிவருவதற்குச் சில தினங்கள் முந்தித்தான், மத்திய இத்தலியிலுள்ள சில பிரதேசங்களில் அரசாங்கத்திற்கு விரோதமான புரட்சிகள் நடைபெற்றன. ஆனல் அதிகாரிகள், ஆஸ்திரியாவின் துணைகொண்டு சுமார் மூன்று வாரத்திற்குள் புரட்சியை அடக்கி விட்டார்கள். புரட்சியை நடத்தியவர்களுக்கும், ஆஸ்திரியாவின் தாக்குதலைத் தங்களால் தாங்க முடியாதென்பது தெரியும். ஆனல், ஆஸ்திரியா, இத்தலியின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதென்று நம்பினூர்கள். தவிர, பிரான்சில் ஜனநாயகத்தின் பெயரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அரசாங்கமானது, தங்களுடைய புரட்சி முயற்சிகளுக்கு உதவி செய்யும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனல் இவையனைத்திலும் ஏமாற்றமடைந்தார்கள்; தோல்வியுமுற்றூர்கள். மாஜினிக்கு இவையெல்லாம் பிடிக்கவில்லை. அந்நியர்களின் உதவியை எதிர்பார்த்து நடத்தப்படுகிற எந்தப் புரட்சியும் வெற்றி பெருதென்பது இவனுடைய திடமான நம்பிக்கை. "ஒரு நாட்டில் சுதந்திர விருட்சம் எப்பொழுது பலன் கொடுக்கிறது தெரியுமா? அந்த நாட்டு மக்கள் தங்கள் கையாலேயே சுதந்திர விதையைப் பூமியில் ஊன்றவேண்டும்; தங்கள் ரத்தத்தினலேயே அதற்கு நீர் பாய்ச்ச வேண்டும்; தங்கள் வீரத்தினலேயே அதற்கு வேலி போட்டுப் பாதுகாக்க வேண்டும். அப்பொழுதுதான் அஃது—அந்தச் சுதந்திர விருட்சம்—பலன் கொடுக்கும்" என்று இவன் முழக்கஞ் செய்தான். "எந்த ஜாதி, தனது சொந்த முயற்சிகளைக் கொண்டு சுதந்திரத்தைப் பெறவில்லையோ, அந்த ஜாதிக்குச் சுதந்திரம் பெற யோக்கியதையில்லை. அப்படிப் பெற்றுலும் அதனை அது நீடித்துக் காப்பாற்றிக்கொள்ள முடியாது.

ஜனங்களே, ஜனங்களுக்காகப் புரட்சிகள் செய்ய வேண்டும்'' என்று தனது நாட்டாருக்கு அறிவுறுத தினன் புரட்சிகள் தோல்வியுற்றுப் போகின்றன வென்று சொன்னல் அதற்குக் காரணம் சரியான தலைமையில்லாமை என்பது இவன் கருத்து. இந்தத் தலைமையை, இளைஞர்களிடத்திலே ஒப்புவிக்க வேண்டுமென்றும், அவர்களிடத்தில்தான், வருங் காலத்தைப் பார்க்கிற சக்தி இருக்கிறதென்றும் இவன் கூறினன்.

''இளைஞர்களைப் பாமர ஜனங்களின் தலைவர்களாக நியமியுங்கள். இவர்களிடத்திலே எவ்வளவு மகத்தான சக்தி அடங்கியிருக்கிற தென்பது உங்களுக்குத் தெரியாது. இவர்களுடைய பேச்சில், பாமர ஜனங்களை வசீகரிக்கும் சக்தி எவ்வளவு அடங்கியிருக்கிறதென்பது உங்களுக்குத் தெரியாது. இவர்கள் புதிய மதத்தை, தேசீய மதத்தைப் பரப்பும் தூதர்கள். ஆனல் ஒன்று ஞாபகமிருக்கட்டும். இளைஞர்கள், அசைவிலேதான் வாழ்கிருர்கள்; உற்சாகத்திலே தான், நம்பிக்கையிலேதான் வளர்கிருர்கள். உயர்ந்த லட்சியத்தினல் அவர்களைப் புனிதப் படுத்துங்கள். போட்டி போட்டுக்கொண்டு முன்னே செல்லுமாறு அவர்களைச் செய்யுங்கள். அவர்கள் மத்தியிலே உற்சாகக் கனலை மூட்டுங்கள். நாடு, புகழ், சக்தி, பெருமை வாய்ந்த பழைய நினைவுகள் ஆகிய இவைகளைப்பற்றி அவர்களிடம் பேசுங்கள்.''

இளைஞர்களால், இத்தலியில் வருங்காலத்தைச் சிருஷ்டிக்க முடியுமென்பது மாஜினியினுடைய திடமான நம்பிக்கை. இதனல்தான், 'யௌவன இத்தலி' சங்கத்தில் நாற்பது வயதுக்கு மேற்பட்ட

வர்கள் அங்கத்தினர்களாகச் சேரக் கூடாதென்ற கண்டிப்பான விதி ஏற்படுத்தினுன்.

'யௌவன இத்தலி' யின் முக்கிய நோக்கம், ஜனங்களைச் சிந்திக்கச் செய்வது; அவர்களைச் செயலுக்கு உந்துவது. "ஜனங்களுக்கு, அவர்கள் ஏன் இந்தக் கேவல நிலைமைக்கு வந்தார்கள், எப்படி வந்தார்கள் என்பவைகளை எடுத்துக்காட்டி இவற்றிற்குப் பரிகாரத்தையும் சொல்லுங்கள். ஏழை மக்களின் பக்கந்தான் கடவுள் இருக்கிருர் என்பதை அவர்கள் நம்பும்படி செய்யுங்கள். இவ்விரண்டையும் செய்துவிட்டீர்களாஞல் உங்கள் லட்சியம் எளிதில் கைகூடும்" என்று மாஜினி, அடிக்கடி தன் நண்பர்களிடம் கூறுவான். இதனுலேயே, இவன் தேசீயத்தை ஒரு மதமாகப் போதித்து வந்தான். "கடவுளும் மகா ஜனங்களும்" என்ற இரண்டு வார்த்தைகள்தான், இவனுடைய 'யௌவன இத்தலி' சங்கத்திற்கு இரண்டு அஸ்திவாரச் சுவர்கள் போலிருந்தன.

புராதனப் பெருமையை மட்டும் சொல்லிக் கொண்டு, நிகழ்காலத்தில் சும்மா யிருப்பதை இவன் சிறிதுகூட விரும்பவில்லை. "இன்றைய இத்தலியை ஒரு சவக்குழி யென்று சொல்கிருர்கள். வாஸ்தவம் ஆனல் வீணர்களும் வம்பர்களும் நிறைந்துள்ள ஒரு நாட்டைக் காட்டிலும், மகான்களைக் கொண்ட ஒரு சவக்குழிக்கு அதிகமான ஜீவகளை இருக்கிறதல்லவா?" என்கிருன் ஓரிடத்தில் மாஜினி. ஜனங்களைச் செயலுக்குத் தூண்ட வேண்டுமாஞல், தலைவர்கள் கர்ம வீரர்களா யிருக்கவேண்டும். இப்படிப்பட்ட கர்ம வீரர்களைச் சிருஷ்டித்துக் கொடுப்பது 'யௌவன இத்தலி' யின் வேலைகளில் ஒன்று.

தன்னுடைய எதிர்கால வேலைக்கு வேண்டிய இந்த மாதிரியான திட்டங்களையெல்லாம் தயாரித்துக் கொண்டு மாஜினி, 1831-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் ஸாவோனு சிறையிலிருந்து வெளி வந்தான். ஆனால் அதிகாரிகள் இவனை உடனே தேசப்பிரஷ்டம் செய்து விட்டார்கள். எனவே, தன் பெற்றோர்களிடமும், தன் தாய்நாட்டினிடமும் விடைபெற்றுக்கொண்டு பிரான்சிலுள்ள மார்சேல்[1] நகரம் வந்து சேர்ந்தான்.

1 Marseilles.

# 4. புரட்சி

மாஜினி, மார்சேல் நகரத்திற்கு வந்து சேர்ந்தான். அப்பொழுது இவனுக்கு வயது இருபத்தாறு. ஏற்கனவே, மார்சேல் நகரத்தில் சில இத்தாலியர்கள் இருந்தார்கள். இவர்கள், மத்திய இத்தலியில் நடைபெற்ற முந்திய புரட்சிகளில் கலந்து கொண்டவர்கள்; பின்னர் தேசப்பிரஷ்ட மடைந்தார்கள். மாஜினி, இவர்களனைவரையும் ஒன்று திரட்டினான். தன்னுடைய திட்டங்களை எடுத்துச் சொன்னான். இந்தத் திட்டங்களை ஒழுங்குபட நிறைவேற்றினால், இத்தலியை, ஒரு தலைமுறையிலேயே, சுதந்திரக் குடியரசு நாடாகச் செய்துவிடலா மென்ற நம்பிக்கையை இவர்களுக்குண்டு பண்ணினான். இவர்களும் இவனை ஒரு தலைவனாக ஏற்றுக்கொண்டார்கள். அனைவரும் சேர்ந்து ஒரு சிறு அறையை வாடகைக்குப் பிடித்தார்கள். அதில் 'யௌவன இத்தலி' சங்கம் ஸ்தாபிதமாயிற்று. இந்தச் சிறிய அறையிலிருந்து கொண்டு, செல்வமும் செல்வாக்குமில்லாத ஒரு சில இளைஞர்களைத் துணைவர்களாகச் சேர்த்துக்கொண்டு பண பலமும் ஆயுத பலமும் மிக்க மகத்தான ஆஸ்திரிய ஏகாதிபத்தியத்தின் ஆதரவு நிழலிலே சுய உணர்வு இல்லாமல் படுத்துறங்கும் பல வர்ணப் பட்சி போன்றிருந்த இத்தலியைத் தட்டியெழுப்பத் தீர்மானித்துவிட்டான் மாஜினி. என்ன துணிச்சல்! எவ்வளவு தன்னம்பிக்கை!!

மாஜினி, ஆரம்பத்திலிருந்தே, 'யௌவன இத்தலி'யின் நோக்கமென்னவென்பதைப் பகிரங்க

மாகத் தெரிவித்துவிட்டான், ஆனல், அந்த நோக்கங்களை யடையும் பொருட்டு, அஃது என்ன முறைகளைக் கடைப்பிடிக்கும் என்பதை இவன் பகிரங்கப் படுத்திச் சொல்லவில்லை. அப்படிச் சொல்லக்கூடாதென்றும் தீர்மானித்தான். அவை ரகசியமாக இருக்க வேண்டுமென்பது இவன் கொள்கை. பகிரங்கமாக வேலை செய்வதென்பது, நாமே வலிய தூக்கு மேடையை நோக்கிச் செல்வது போலாகுமென்று இவன் கருதினன். எனவே, 'யௌவன இத்தலி' ஆரம்பத்திலிருந்தே ஒரு ரகசியச் சங்கமாக இருந்தது.

இந்தச் சிறிய கோஷ்டியினர், தங்கள் தாய் நாட்டின் விமோசனத்திற்காக எவ்வளவு உற்சாகத்துடன் வேலை செய்தார்கள்! எத்தகைய தன்னலத் தியாகம்! மாஜினியே இதை வருணிக்கட்டும்:—

"அப்பொழுது என்னேடு சேர்ந்து உழைத்த அந்தச் சிறிய கோஷ்டியினரைப் போல் வேருெரு கோஷ்டியினரை நான் பார்த்ததில்லை. அவர்கள் பக்தி சிரத்தையோடு வேலை செய்தார்கள். பரஸ்பரம் ஒருவருக்கொருவர் ஆழ்ந்த அன்பு செலுத்தினர்கள். அவர்கள் பரிசுத்தமான உற்சாக முடையவர்களாயிருந்தார்கள். எந்த நாளானலுஞ் சரி, எவ்வளவு நேரமானலுஞ் சரி, அவர்கள் எந்த வேலையையுஞ் செய்யத் தயாராயிருந்தார்கள். எங்களுக்கு அப்பொழுது தனியாக ஒரு காரியாலயம் இல்லை. வெளியிலிருந்து வந்து உதவி செய்வோரும் இல்லை. நாள் பூராவும், இராக் காலத்தில் பெரும் பாகமும் நாங்கள் எங்கள் வேலையில் முழுகிக் கிடந்தோம். கட்டுரைகள் எழுதுவது, கடிதப் போக்கு வரத்துக்கள் செய்வது, இத்தலியிலிருந்து வருகிறவர்களிடமிருந்தும், வெளி நாடுகளிலிருந்து வரும் இத்தாலியர்களிடமிருந்தும்

விஷயங்கள் சேகரிப்பது, கப்பல் மாலுமிகளை எங்கள் கட்சியில் அங்கத்தினர்களாகப் பதிவு செய்து கொள்வது, காகிதங்கள், பத்திரிகைகள் முதலியவை களை மடிப்பது, கவர் கூடுகளை ஒட்டுவது முதலிய எல்லா வேலைகளையும் நாங்கள் பங்கு போட்டுக் கொண்டு செய்தோம். எல்லோரும் சகோதரர்கள் போல் சமதிருஷ்டியுடன் வாழ்ந்து வந்தோம். எங்களுக்கு, ஒரே ஓர் எண்ணந்தான், ஒரே ஒரு நம்பிக்கைதான், ஒரு லட்சியந்தான் இருந்தது. குடியரசு சித்தாந்தத்திலே நம்பிக்கை கொண்டிருந்த அந்நிய நாட்டார் பலர், எங்களுடைய உறுதியையும், சோர்வில்லாத உழைப்பையும் கண்டு வியந்தார்கள்; எங்கள் மீது அன்பு செலுத்தினார்கள். எங்களுடைய அன்றாடத் தேவைகள் அதிகமாவிருந்தன. ஆனால் நாங்கள் எதனையும் அலட்சிய பாவத்தோடு, புன்சிரிப் போடு ஏற்றுக்கொண்டோம். ஏனென்றால் எதிர் காலத்தைப்பற்றி நாங்கள் திடமான நம்பிக்கை கொண்டிருந்தோம்.''

சுமார் இரண்டு வருஷ காலம் இந்தச் சிறிய கோஷ்டியினர் சலியாது உழைத்தனர். இவர்கள், தங்களுக்கென்று சொந்தமாக ஓர் அச்சுக்கூடத்தை ஏற்படுத்திக் கொண்டனர். ''எங்களிலே ஒருவன் அச்சுக் கோர்ப்பான்; இன்னொருவன் சரி பார்ப்பான்; வேறொருவன் எங்கள் பிரசுரங்களை, உரிய இடங் களிலே கொண்டு சேர்ப்பிப்பான்.'' இப்படியாக இந்த அச்சுக்கூடத்திலிருந்து அநேக துண்டுப் பிரசுரங்களை ஆயிரக்கணக்கான பிரதிகளாக வெளியிட்டு இத்தலிக்கு ரகசியமாக அனுப்பி வந்தான் மாஜினி. இவை தவிர, தீவிரப் போக்குடைய பல நாட்டுப் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதினான்.

இத்தலியில், ஆயிரக்கணக்கான இளைஞர்கள், மாஜினியின் எழுத்து வேகத்திலும், மாசற்ற தேச பக்தியிலும் ஈடுபட்டு, தங்களுடைய சர்வத்தையும் பலி கொடுக்கத் தயாரானார்கள்; மாஜினியின் சித்தாந்தங்களை தேசமெங்கணும் பரப்பினார்கள். இவர்களுக்கு மாஜினி கட்டளை யிடுகிறான் :—

“மலைகளின்மீது ஏறுங்கள்; குடியானவர்களுடைய குடிசைகளில் சென்று உட்காருங்கள்; தொழிலாளர்களுடைய பட்டடைகளுக்குச் செல்லுங்கள். அவர்களெல்லாரையும் இதுகாறும் நீங்கள் புறக்கணித்து வந்தீர்கள். இனி அப்படி இருக்கக்கூடாது. அவர்களுடைய நியாயமான உரிமைகள் என்ன, அவர்களுடைய பரம்பரைச் சம்பிரதாயங்களென்ன, பரம்பரைப் புகழென்ன, பழைய வியாபாரப் பெருமைகளென்ன இவைகளெல்லாவற்றையும் பற்றி அவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். அவர்கள் ஆயிரக்கணக்கான கொடுமைகளால் அழுத்தப்பட்டுக் கிடக்கிறார்களென்பதுகூட அவர்களுக்குத் தெரியாது. அவற்றை யாரும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லவில்லை. அவற்றையெல்லாம் நீங்கள் விவரித்துச் சொல்லுங்கள்.

இத்தலியிலே, ‘யௌவன இத்தலி’யின் கிளைச் சங்கங்கள் பல தோன்றலாயின. இரண்டு வருஷ காலத்திற்குள். சுமார் அறுபதினாயிரம் பேர் இந்தச் சங்கங்களில் அங்கத்தினர்களாகச் சேர்ந்தார்கள். இங்ஙனம் ‘யௌவன இத்தலி’ செல்வாக்கிலே பெருகிக்கொண்டு வருவதை ஆஸ்திரிய அரசாங்கத்தார் விரும்பவில்லை. 1833-ஆம் வருஷம், இந்தச் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்வது குற்றமாகு

மென்றும், அப்படிச் சேர்வோர் மரணதண்டனை விதிக்கப்படுவர் என்றும் உத்தரவிட்டனர். இது நிற்க,

பீட்மாண்ட் அரச பரம்பரையினர் சுயேச்சாதிகாரிகளாயிருந்த போதிலும் இத்தாலிய ரத்தமுடைய அரச பரம்பரையினராயிருந்தார்கள். ஆஸ்திரிய ஆதிக்கத்தினின்று இத்தலியை விடுவிக்க வேண்டுமானால் அஃது இந்த பீட்மாண்ட் அரச பரம்பரையினரால்தான் முடியுமென்று எல்லா இத்தாலியர்களும் நம்பி வந்தார்கள். இதற்கனுகூலமாக, இந்த பீட்மாண்ட் சிங்காதனத்தில், 1830-ஆம் வருஷம் சார்ல்ஸ் ஆல்பர்ட்[1] என்ற ஒருவன் கொலு வீற்றிருந்தான். இவன் தேசீய வாதியாக நடித்தான். பாலியத்தில் 'கார்போனரி' யில் ஓர் அங்கத்தினனாகக்கூட இருந்தான். இத்தகைய காரணங்களினால், தேசீய இயக்கத்திற்குத் தலைமை பூண்டு நடத்தக்கூடியவன் இவன் ஒருவனே என்று எல்லாத் தீவிரவாதிகளும் நம்பினார்கள். மாஜினி கூட..ஆம், "நன்மைக்கும் தீமைக்கும், சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும், முன்னேற்றத்திற்கும் பிற்போக்குக்கும் சமரஸமே ஏற்பட முடியாது" என்று பின்னொரு காலத்தில் முழக்கஞ் செய்த மாஜினி கூட, நம்பினான். மார்சேலுக்கு வந்த நாலைந்து மாதங் கழித்து, மேற்படி சார்லஸ் ஆல்பர்ட் மன்னனுக்கு, தேசீய இயக்கத்திற்குத் தலைமை பூண்டு, ஆஸ்திரிய ஆதிக்கத்திற்கு விரோதமாகக் கிளம்புமாறு ஒரு கடிதம் எழுதினான். இந்தக் கடிதத்திற்கு சார்லஸ் ஆல்பர்ட் மன்னன் அளித்த பதிலென்ன? மாஜினி, இத்தாலிய எல்லைக்குள் காலடி எடுத்துவைத்தால், உடனே கைது செய்யப்பட வேண்டுமென்று உத்தர

1 Charles Albert : 1798—1849.

விட்டான்! ஆனல், மார்சேலிலிருந்த 'தேசப்பிரஷ்டர்கள்' இதற்காகச் சலிப்புக் கொள்ளவில்லை. மேலே சொன்ன விதமாகப் பிரசாரஞ் செய்து வந்ததோடு, ஜினேவா, அலெஸ்ஸாந்திரியா[1] முதலிய இடங்களில் புரட்சியைக் கிளப்பத் திட்டம் போட்டுக் கொண்டு அதற்கான ஏற்பாடுகளையும் துரிதமாகச் செய்தார்கள். ஒன்று பீட்மாண்ட் அரசன், இந்தப் புரட்சிகளுக்குத் தலைமை பூண்டு நடத்தவேண்டும்; அல்லது முடி துறக்கவேண்டும். இவர்கள் நோக்கம் இதுதான். ஆனல் கடைசி சமயத்தில், இவர்களுடைய ஏற்பாடுகள் பீட்மாண்ட் அதிகாரிகளுக்குத் தெரிந்து விட்டன. பலமான அடக்குமுறையை ஆரம்பித்தார்கள். சந்தேகிக்கப்பட்ட நபர்களையெல்லாம் சுட்டுக்கொன்ருர்கள். கைதியானவர்களைப் பலவித இம்சைகளுக்குட்படுத்தினர்கள். நண்பர்களைக் காட்டிக் கொடுக்குமாறு மருந்துமாயங்களெல்லாம் உபயோகிக்கப் பட்டன. மாஜினியின் உயிர்த் தோழனுகிய ஜாக்கோபோ ரூபினி[1] என்பவன், நண்பர்களைக் காட்டிக் கொடுக்க மனமில்லாதவனுய் சிறையிலேயே தற்கொலை செய்துகொண்டு விட்டான். மாஜினிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பிரெஞ்சு அரசாங்கத்தார், இவனைத் தங்கள் நாட்டினின்று பிரஷ்டம் செய்துவிட்டதாக உத்தரவு போட்டு விட்டார்கள். இவனுடைய அச்சுக்கூடம், காரியாலயம் எல்லாம் கலைக்கப்பட்டு விட்டன. மாஜினி, மார்சேலிலேயே ஒரு நண்பனுடைய வீட்டில் சுமார் ஒரு வருஷ காலத்திற்கு மேல் ஒளிந்திருந்து வாழ்க்கையை நடத்தினன். இந்த ஒரு வருஷ காலத்தில், இரண்டு தடவைதான்

---

1 Alessandria ஜினேவாவுக்கு வடக்கேயுள்ளது.

2 Jacobo Ruffini.

வீட்டைவிட்டு வெளியே சென்ருன். அதுவும் இராக் காலத்தில். ஒரு சமயம் பெண் வேஷந்தரித்துக் கொண்டு சென்ருன்; இன்னெருசமயம் போர்ச் சேவகனைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு சென்ருன்.

பீட்மாண்டில் புரட்சிகளை உண்டுபண்ண வேண்டுமென்ற முயற்சி தோல்வியடைந்து விட்டது. அது காரணமாக உத்தம நண்பர்கள் பலர், சிறப்பாக ஜாக்கோபோ ரூபினி, அரசாங்கத்தாரின் அடக்கு முறைக்கு இரையாகி விட்டனர். இவையெல்லாம் சேர்ந்து, மாஜினியின் தேகத்தை நோய்க்கும், உள்ளத்தைக் கலக்கத்திற்கும் இரையாக்கிவிட்டன. பைத்தியம் பிடித்தது போலாகிவிட்டான். இந்தச் சந்தர்ப்பத்தில் ஜியூட்டிடா சித்தோலி[1] என்ற ஒரு பெண்ணுல் காப்பாற்றப்பட்டான். இந்தப் பெண்ணைத் தன் ஆயுள் பரியந்தம் இவன் மறக்கவில்லை.

1 Giutida Citholi.

# 5. ஏக்கம்

இனி மார்சேலில் இருந்து பிரயோஜனமில்லை யென்பதைத் தெரிந்த மாஜினி, 1833-ஆம் வருஷம் ஜுலை மாதம் ஸ்விட்ஜர்லாந்திலுள்ள ஜினீவா[1] நகரத்திற்குச் சென்றான். பீட்மாண்ட் முதலிய பிரதேசங்களில் மீண்டும் ஒரு புரட்சியை நடத்துவதற்கான ஏற்பாடுகள் இங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தன. இவற்றை, தான் நேரில் இருந்து கவனிக்க வேண்டுமென்பதற்காக இவன் ஜினீவா சென்றான். இங்கு, பல நாட்டுப் பிரஷ்டர்களும் கூடியிருந்தார்கள். இவர்களனைவரையும் ஒரு தொண்டர் படையாகச் சேர்த்தான். எல்லா ஏற்பாடுகளும் முடிந்தன. ஆனல், புரட்சியிலே மனமில்லாத ஒருவன், மாஜினியின் ஆலோசனைக்கு விரோதமாக, தொண்டர் படையின் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். கேட்க வேண்டுமா? புரட்சி நடைபெறவில்லை. தொண்டர் படை கலைக்கப்பட்டுவிட்டது. ஸ்விட்ஜர்லாந்து அரசாங்கத்தார், மாஜினியை தேசப்பிரஷ்டம் செய்துவிட்டார்கள். இவனுடைய ஸ்தாபனமும் கலைக்கப்பட்டுவிட்டது. இவனுடைய சகாக்கள் பலர் நாடு கடத்தப்பட்டு விட்டார்கள். ஆனல், மாஜினி ஸ்விட்ஜர்லாந்திலேயே இருக்கத் தீர்மானித்தான். இத்தலிக்குச் சமீபத்திலிருந்தால்தான், தனது புரட்சி ஏற்பாடுகளை ஒருவாறு தொடர்ந்து செய்து கொண்டிருக்கலாமென்பது இவன் எண்ணம்.

---

1 Geneva.

ஆனால் ஸ்விட்ஜர்லாந்து அதிகாரிகள் இவனைச் சும்மாவிடவில்லை. இவனை எப்படியாவது கைது செய்து நாடுகடத்திவிடத் தீர்மானித்தார்கள். மற்ற வல்லரசினர், இவர்களை அவ்வளவு பலமாக நெருக்கினர். எனவே, இவன்—மாஜினி—ஊர் ஊராக, வீடு வீடாக ஓடி ஒளிந்து வாழவேண்டியிருந்தது. சுமார் மூன்று வருஷ காலம், போலீஸார் இவனை வேட்டையாடினார்கள். வேட்டை என்று சொன்னால், அதனுடைய முழு அர்த்தம் என்னவோ அந்த அர்த்தத்தில் வேட்டையாடினார்கள். இதில் சிறிது கூட மிகை கிடையாது. ஒரு சமயம், தொடர்ந்தாற்போல் ஏழு மாத காலம் போலீஸாருக்கு அகப்படாமல் இவன் ஓடியிருக்கிறான். ஒரு நாள் இரவு ஓரிடத்தில் இருந்தோமென்பதில்லை. ஊர்ப்புறங்களிலே, குட்டிச்சுவர்களுக்கு மத்தியிலே எத்தனையோ இரவுகளைக் கழித்திருக்கிறான். தன்னந் தனியனாய், அன்ன ஆகாரமில்லாமல், காட்டு வழிகளிலே, மலைப் பாதைகளிலே மைல் கணக்காக நடந்து சென்றிருக்கிறான். இவ்வளவும் எதற்காக? போலீஸாரை ஏமாற்றுவதற்கா? இல்லை, இல்லை. தாய் நாட்டுக்குச் சேவை செய்து கொண்டிருக்க வேண்டுமென்பதற்காக!

இவ்வளவு அல்லல்பட்டுக் கொண்டிருந்த காலத்திலும், மாஜினி, இத்தலியிலே என்னென்ன நடைபெறுகிறதென்பதைத் தன் நண்பர்கள் மூலம் தெரிந்துகொண்டு வந்தான். இந்தச் செய்திகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு 'யௌவன இத்தலி' சங்க வேலைகளையும் விடாமல் நடத்தி வந்தான். அவ்வப்பொழுது துண்டுப் பிரசுரங்களை எழுதி வெளியிட்டு இத்தலிக்கு அனுப்பி வந்தான். இவைகளுக்காக, அச்சுக்கூலி, தபாற்செலவு முதலியன

வற்றையும் இவனே சமாளிக்க வேண்டியிருந்தது. தனது அன்றாடத் தேவைகளைக்கூட மறுத்துக் கொண்டு இவன் இந்தக் காரியங்களைச் செய்து வந்தான். அநேக சந்தர்ப்பங்களில், இவன் ஆடையில்லாமல் அவதிப்பட்டிருக்கிறான். தனக்கு அவசியமாக என்ன தேவையோ அதைப்பற்றி தன் தாயாருக்கு, மிக்க சங்கோஜத்துடன் எழுதுவான். அவளும், ஒரு சமயங்கூட மறுக்காமல், தன்னால் முடிந்ததை அவ்வப்பொழுது அனுப்பி வந்தாள். காட்டிலே, மேட்டிலே, பாலைவனத்திலே எங்கிருந்தாலும் தாயன்பு அமுத ஊற்றல்லவா?

ஆனால் இந்தத் தேக உபத்திரவங்கள், மனோ வேதனைகள் முதலியனகூட மாஜினியை அதிகமாகப் பாதிக்கவில்லை. தான் தொடங்கிய புரட்சிகள் வெற்றியடையாமற் போனதன் காரணமாக, தன் கட்சி சீர்குலைந்து போய்க்கொண்டிருப்பது இவனை அதிகமாகப் பாதித்து விட்டது. இத்தலியில் முக்கியமான பலர், கட்சியைவிட்டுப் பிரிந்து சென்று விட்டார்கள். இவனோடு பிரஷ்ட வாழ்க்கையை நடத்திக்கொண்டு வந்த பலர், தோல்விக்கெல்லாம் காரணம் இவன்தானென்று பழி சுமத்தினர்; நேர்முகமாகவும் மறைமுக மாகவும் இவனைத் தாக்கினர். இவையெல்லாம் சேர்த்து, இவனை ஒன்றுமில்லாத ஓர் ஏக்கத்திற்குட்படுத்தி விட்டன. "என்னைக் கரியதோர் ஏக்கம் பிடித்துக்கொண்டு விட்டது. உலகத்திலே நான் தனியனாக விடப்பட்டு விட்டதான ஓர் உணர்ச்சி ஏற்பட்டு விட்டது. என் தாயாரைத் தவிர, இந்த உலகமெல்லாம் எனக்குச் சூனியமாகப்பட்டது" என்று இந்தக் காலத்தை இவனே வருணித்திருக்கிறான். இப்படிப்பட்ட 'கரிய ஏக்கத்'தில்கூட தாய் நாட்டின்

எதிர்கால நல்வாழ்வு என்னும் ரேகையானது விட்டு விட்டு இவன் உள்ளத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்தது. கதறுகிறான் ஓரிடத்திலே :—

"என் குற்றத்திற்குப் பழி தீர்த்துக் கொள்வது போல இறந்துபோன என் நண்பர்களுடைய உருவங்கள் என் முன் தோன்றித் தோன்றி மறைந்தன. ஐயோ! அவர்களை மீண்டும் நான் உயிர்ப்பிக்க முடியவில்லையே! எத்தனை தாய்மார்களை நான் அழச் செய்திருக்கிறேன்! இத்தாலிய இளைஞர்கள், மகத்தான சேவைகளில் ஈடுபட வேண்டுமென்றும் தாய் நாட்டின் மீது தணியாத காதல் கொள்ள வேண்டுமென்றும் நான் வற்புறுத்திக்கொண்டு சென்றால், இன்னும் எத்தனை தாய்மார்கள் அழக் கற்றுக்கொள்ள வேண்டுமோ?"

இந்த மாதிரியான ஏக்கத்திலே இவன் பல நாள் அவஸ்தைப்பட்டுக் கடைசியில் ஒருவாறு மன நிம்மதியடைந்தான். இந்த நிம்மதி இவனை யறியாமலே இவனுக்கு ஏற்பட்டது. இதைப்பற்றி இவனே ஓரிடத்தில் கூறுகிறான் :—

"ஒருநாள் என் படுக்கையைவிட்டு எழுந்ததும், என் மனம் சாந்தியடைந்திருப்பது தெரிந்தது. ஏதோ ஒரு பெரிய ஆபத்திலிருந்து மீண்டுவிட்டதாக உணர்ந்தேன். ∴ ∴ ∴ இயற்கை யன்னை என்னைப் பார்த்துச் சிரிப்பது போலத் தோன்றியது. களைத்துப் போயிருந்த எனது சரீரத்திலே புதியதொரு ஜீவசக்தி புகுந்தது. ∴ ∴ ∴ என்னையே நான் பரிசோதித்துக்கொண்டேன். அப்பொழுது என் மனம் எனக்கு ஆணையிட்டது :— 'மகனே! உனது லட்சியம்

இன்னதுதான் என்று வகுத்துக்கொண்டு அதில் நீ நம்பிக்கைகொண்டு விட்ட பிறகு, எந்த இடையூறு களும் உன்னைத் தடை செய்யக்கூடாது. உனது சக்தி யனைத்தையும் உபயோகித்து அந்த லட்சியத்தை நிறைவேற்று. அன்பினால் ஆசீர்வதிக்கப்பட்டாலும், துவேஷத்தினால் வெறுக்கப்பட்டாலும் உன் லட்சி யத்தை நிறைவேற்று. மற்றவர்கள் உன்னோடு சேர்ந்து உனக்குப் பலம் கொடுத்தாலுஞ் சரி, தங்கள் கொள் கைக்காக வீர மரணமெய்துகிற மகான்களை இயற்கை யாகச் சூழ்ந்துகொண்டு விடுகிற தனிமையானது உனக்குத் துன்பத்தைத் தந்தாலுஞ் சரி, உன் லட்சி யத்தை நிறைவேற்று. நீ செல்ல வேண்டிய பாதை தெளிவா யிருக்கிறது. துயர்களையும் ஏமாற்றங் களையும் பொருட்படுத்திக்கொண்டு நீ அந்தப் பாதை யில் செல்லத் தயங்குவாயானால், உன் லட்சியத்தை யடையப் பின்வாங்குவாயானால் நீ ஒரு கோழை; உன்னுடைய எதிர்காலத்திற்கு நீ ஒரு துரோகி.''

இவனுடைய ஸ்விட்ஜர்லாந்து வாசத்தின்போது, இவனுடைய நிழல்போலிருந்தவர்கள், மேலே சொல் லப்பட்ட ஜாக்கோபோ ரூபினியின் இரண்டு சகோதரர்களான அகோஸ்ட்டினோ ரூபினியும், ஜியோவன்னி ரூபினியுமாவார்கள்.[1] இவர்கள் மாஜினியைத் தங்கள் குருவாக மதித்து அவன் சென்ற வழி யெல்லாம் சென்றனர். ஆனால் அவர் களுக்குக்கூட ஸ்விட்ஜர்லாந்தின் ஒளிந்த வாழ்க் கையில் சலிப்பு ஏற்பட்டு விட்டது. வேறெங்கேனும்

1 Agostino Ruffini and Giovanni Ruffini.

போகலாமென்று தங்கள் தலைவனைக் கேட்டுக்கொண்டார்கள். இதனை மறுக்க முடியாதவனாய், மாஜினி, அவர்களுடன் 1837-ஆம் வருஷம் ஜனவரி மாதம் லண்டன் நகரத்திற்கு வந்தான். அப்பொழுது இவனுக்கு வயது முப்பத்திரண்டு.

# 6. சேவை

முன்பின் பரிச்சயமில்லாத ஊர். இங்கிலீஷ் பாஷையும் சரியாகத் தெரியாது. கையிலே போதிய பணமில்லை. இப்படிப்பட்ட நிலைமையில் மாஜினி, ரூபினி சகோதரர்கள் இருவர், நாடு கடத்தப் பட்டு வந்திருந்த வேறு இரண்டு பேர் ஆகிய ஐவரும், லண்டனில் சாதாரண ஜனங்கள் வசிக்கிற இடத்தில் சுமார் மூன்று வருஷ காலம் வாழ்க்கையை நடத்தினார்கள். மகா பரிதாபகரமான வாழ்க்கை! இந்த ஐவருக்குள்ளும் அடிக்கடி மனஸ்தாபங்கள் உண்டாகும். சில்லரை விஷயங்களைப் பற்றியெல்லாம் சச்சரவிட்டுக் கொள்வார்கள். எல்லாம் பணமில்லாக் குறைதான்!

மாஜினி, கவி உள்ளம் படைத்தவன். புஸ்தகங் களிலே மன நிம்மதி பெறப் பார்ப்பான். புஸ்தகங் களைச் சொந்தமாக வாங்கிப் படிக்கக் கையில் காசில்லை. இவனை நம்பி புஸ்தகங்களை இரவல் கொடுப்பாருமில்லை. எனவே 'பிரிட்டிஷ் மியூசியம்'[1] என்னும் பெரிய நூல் நிலையத்திற்குச் சென்று பகல் வேளைகளைக் கழிப்பான். புஸ்தகங்களைப் படித்துக் கொண்டிருந்தால் வயிற்றுப் பிழைப்பு நடக்க வேண்டுமே. இவனுடைய தகப்பன், எண்ணெய் வியாபாரம் செய்யும்படி ஒரு தொகை அனுப்பினான். மாஜினி, வியாபாரியாக இருக்க முடியுமா? தந்தை அனுப்பின பணத்தைத் தோற்றான். இதைக் கேட்ட

---

1 British Museum.

தந்தை ஆத்திரமடைந்து இவனுக்கு ஒரு கடிதம் எழுதினன். இதனல் இனி குடும்பத்திலிருந்து எவ்வித உதவியும் பெறுவதில்லேயென்று தீர்மானித்து விட்டான் மாஜினி. இனி, பிழைப்புக்கு வழி? அச்சுக்கூடங்களிலே எங்கேனும் 'ப்ரூப்' திருத்தும் வேலே அகப்படுமாவென்று பிரயத்தனப்பட்டான். கிடைக்கவில்லே. பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதிப் பணஞ் சம்பாதிக்கலாமா வென்று பார்த்தான். இத்தாலிய பாஷையிலே முதலில் கட்டுரைகள் எழுதி, பின்னர் வேருெருவனேக்கொண்டு ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பித்து, பிறகே பத்திரிகைகளுக்கு அனுப்ப வேண்டியிருந்தது. ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்களுக்கு இவன் முன்கூட்டியே பணத்தைக் கொடுத்துவிடுவான். ஆனல் இவனுக்குப் பத்திரிகாலயங்களிலிருந்து லேசில் பணங் கிடைக்காது. அப்படிக் கிடைத்தாலும் மிகச் சொற்பமாகத்தானிருக்கும். இந்த லட்சணத்தில், இவன், தன்ஃன அண்டினவர்களுக்கெல்லாம் இல்லே யென்று சொல்லாமல் ஏதேனும் உதவி செய்வான். இதனல், இவனுடைய சாமான்கள் ஒவ்வொன்ருக அடகுக் கடைக்கு நகர ஆரம்பித்தன.

ஒரு சமயம் ஞாயிற்றுக்கிழமை ஆகாரத்திற்காக, சனிக்கிழமையன்று, ஒரு ஜதை பூட்ஸ்களேயும் பழைய 'வெயிஸ்ட் கோட்' ஒன்றையும் அடகுவைத்துப் பணம் வாங்கினன். இன்னெருசமயம், நல்ல குளிர், இவனுடைய நண்பன் ஒருவன் நடுங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து இவன், தன்னுடைய ஒரே 'ஒவர் கோட்டை'க் கொடுத்துவிட்டான்! அநேக சமயங்களில் இவன், உடுத்திக்கொள்ளப் போதுமான ஆடையில்லாத காரணத்தினல், 'பிரிட்டிஷ் மியூசிய'த்திற்குப்

போகாமலே இருந்திருக்கிறான். தன்னுடைய கையெழுத்துப் பிரதிகளை அடகு வைத்து ஒரு சமயம் கடன் வாங்கப் பார்த்தான். பலிக்கவில்லை. பாரிஸ் நகரத்திலிருந்த சில நண்பர்கள் இவனுக்குச் சுமார் நூற்றிருபது பவுன் கடனாகக் கொடுத்தார்கள். இதைக் கொண்டு சிறிது காலம் தள்ளினான். இவனுடைய களங்கமற்ற மனத்தையே ஆதாரமாக வைத்துக் கொண்டு ஒரு நண்பன், இவனுக்கு ஒரு சிறு தொகை நன்கொடையென்று சொல்லிக்கொடுத்து பிறகு அதற்கு வட்டி போட்டு பூராவையும் வசூலித்து விட்டான்! இத்தலியிலுள்ள சில நண்பர்கள், இவனுக்காக சந்தா மாதிரி வசூலித்து அதனை நன்கொடையாகக் கொடுப்பதாக இவனுக்கு யோசனை கூறினார்கள். "நன்கொடையா? என் தாயார் இதைக் கேட்டால் வெட்கத்தினால் இறந்து போவாள்" என்று சொல்லி இந்த யோசனையைக் கண்டிப்பாக நிராகரித்துவிட்டான். எனவே, வேறு வழியின்றி லேவாதேவிக்காரர்களின் கையில் சிக்கிக்கொண்டான். அபார வட்டி! நூற்றுக்கு நூறு விகிதங்கூட வட்டி கொடுத்திருக்கிறான். "ஏழை மனிதனுடைய கடைசி சொட்டு ரத்தத்தையும், அவனுடைய சுயமரியாதையின் கடைசி கிழிசலையும் பறித்துக்கொண்டு விடுகிறார்கள் கடன் கொடுக்கிறவர்கள்" என்று மனம் வெதும்பி இவன் ஓரிடத்தில் கூறுகிறான். ஆனால் இவன் ஒருவனுடைய நிலைமை மட்டும் இப்படியில்லை. அநேகமாக, அரசியல் காரணங்களுக்காக வெளிநாடுகளிலிருந்து ஓடிவந்துவிட்ட எல்லாருடைய நிலைமையும் இப்படித்தானிருந்தது.

இப்படி இவன் வாழ்க்கையானது இருள் மயமாக இருந்த போதிலும், சில பேருடைய நட்பு இவனுக்கு

ஒரு பிரகாசத்தைக் கொடுத்தது. சிறந்த மேதையாகிய தாமஸ் கார்லைல்[1] என்பவனுடைய நட்பு இவனுக்குக் கிடைத்தது. கார்லைல் தம்பதிகளின் வீட்டுக்கு அடிக்கடி சென்று மனச் சாந்தி பெறுவான். கார்லைலுக்கும் இவனுக்கும் கருத்து வேற்றுமைகள் பல உண்டு. இரண்டு பேரும் பல தடவைகளில் முரட்டுத் தனமாக வாதஞ் செய்திருக்கிறார்கள். ஆனால் இவைகளினால் இவர்களுடைய நட்பு வளர்ந்ததே தவிர குறையவில்லை. இங்ஙனமே, சுதந்திரத்தைப்பற்றி விஸ்தரித்து எழுதிய ஜான் ஸ்டூவர்ட் மில்[2] என்ற பேரறிஞனுடைய நட்பும், இன்னும் பல அறிஞர்களுடைய நட்பும் இவனுக்கு ஏற்பட்டன. இவைதான் இவனுக்குப் பெரிய ஆறுதலாயிருந்தன. இந்த நண்பர்களுடைய சிபார்சின் பேரிலும் முயற்சியின் பேரிலும் ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு இவன் எழுதி வந்த கட்டுரைகளுக்கு முன்னைக் காட்டிலும் அதிகமாக நிவேதனம் கிடைத்தது. தேவைக்கு அதிகமான பணம் கிடைத்து விட்டால், அதை எப்படிச் சேமித்துவைப்பதென்பதைப்பற்றி அறிஞர்கள் சிந்திப்பதே யில்லை. மற்றவர்களுடைய நன்மையை உத்தேசித்து அதை எப்படிச் செலவழிப்பது என்பதுதான் இவர்கள் கவலை. மாஜினியும் தனது வருவாயைக் கொண்டு, தொழிலாளர்களின் நலனுக்காக 'அப்போஸ்ட்டோலேட்டோ போப்பாலாரே'[3] என்ற ஒரு பத்திரிகையை ஆரம்பித்தான். இந்தப் பத்திரிகையைத் தொடங்குவதற்கு முன்னரே, லண்டனில் வசித்துக்கொண்டிருந்த இத்தாலியத் தொழிலாளர்களை ஒன்று சேர்ப்பித்து

1 Thomas Carlyle 1795—1881.

2 John Stuart Mill 1806—1873.

3 Apostolato Popalare.

அவர்களுக்காக ஒரு சங்கத்தை ஏற்படுத்தினன். இந்தச் சங்கத்தின் ஓர் அங்கமாகவே மேற்படி பத்திரிகையை வெளியிட்டான். இதில்தான் **மனிதன் கடமை** என்ற நூலின் முதல் ஆறு அத்தியாயங்கள் தொடர்ந்து வெளிவந்தன.

இன்னும் சமுதாய சேவைகள் பலவற்றில் மாஜினி ஈடுபட்டான். லண்டனில் வசித்துக்கொண்டிருந்த சில இத்தாலியர்கள், இத்தலியிலிருந்து ஏழைப் பிள்ளைகள் பலரை ஆசை வார்த்தைகள் காட்டி மயக்கி அழைத்து வந்து, அவர்களைப் பிச்சை யெடுக்குமாறும் வேறு இழி தொழில்கள் புரியுமாறும் செய்து, அவர்கள் மூலம் பணம் சம்பாதித்து வந்தார்கள். மாஜினி, இவர்களிற் பலரைக் கண்டுபிடித்து தண்டனைக்குட்படுத்தினன். இவர்களுடைய பிடியினின்று விடுவிக்கப்பட்ட ஏழை மக்களுக்கென்று இராப் பள்ளிக்கூடமொன்று ஏற்படுத்தி நடத்தினன். இவர்களுக்கு ஆங்காங்கு வேலை தேடிக் கொடுத்தான். இந்த இத்தாலிய இளைஞர்களுக்கு அடிக்கடி இத்தலியின் புராதன வரலாற்றைப்பற்றியும், அது தற்போது அடைந்திருக்கும் தாழ்ந்த நிலையைப்பற்றியும் பிரசங்கங்கள் செய்வான். இத்தலியை இவன் எப்பொழுதுமே 'ஜனங்களுடைய இத்தலி' என்றுதான் அழைப்பான். இத்தலியின் வருங்கால வாழ்வில் இளைஞர்களுக்குத்தான் பங்கு உண்டு என்பதை இவர்களுக்கு வலியுறுத்தி வந்தான். இங்ஙனம் இவன் உழைப்பிலே மன நிம்மதி பெற்றுவந்தான். இந்தக் காலத்திலே இவனுக்கு, ஆங்கில அரசியல் உலகத்திலும் இலக்கிய உலகத்திலும் ஒரு செல்வாக்கு ஏற்பட்டு வந்தது.

முதல் மூன்று வருஷத்துப் பரிதாபகரமான வாழ்க்கைக்கு நஷ்டஈடு செய்வதுபோல், பிந்திய சுமார் எட்டு வருஷ வாழ்க்கை இருந்ததென்று சொல்லலாம். ஆக, இவன் லண்டனில் பதினேரு வருஷங்களுக்கு மேல் கழித்தான்.

# 7. ஏமாற்றம்

மாஜினி, இத்தலியில் இல்லாதிருந்தாலும் இவனுடைய சக்தி அங்கு வேலை செய்துகொண்டுதானிருந்தது. லண்டனிலிருந்து இவன் வெளியிட்டு வந்த 'அப்போஸ்ட்டோலேட்டோ போப்பாலாரே' பத்திரிகையையும், மற்றப் பத்திரிகைகளில் இத்தாலிய ஒற்றுமையைப்பற்றியும் எழுதி வந்த கட்டுரைகளையும், இத்தலியிலுள்ளவர்கள் உற்சாகத்தோடும் கவனத்தோடும் படித்து வந்தார்கள். மாஜினியின் மாசற்ற தேச பக்தியும், உயர்ந்த லட்சியமும் அனைவருடைய உள்ளத்தையும் கவர்ந்தன. ஆனால் இவர்களுக்கு ஒரு சந்தேகமும் தோன்றியது. இவ்வளவு உயர்ந்த லட்சியமுடைய ஒரு தலைவனுடைய முயற்சியின் பேரில் ஆரம்பிக்கப்பெற்ற புரட்சிகள் யாவும் ஏன் தோல்வியடைந்தன? அனாவசியமாக எத்தனை உயிர்கள் சேதமாயின? இந்த மாதிரியான சந்தேகங்களினால் பெரும்பாலோர் மாஜினியின் லட்சியத்தைப் போற்றினர்களே தவிர இவனுடைய முறைகளைப் பின்பற்றவில்லை. இப்படிப்பட்டவர்களெல்லோரும் ஒரு கட்சியினராகச் சேர்ந்து கொண்டார்கள். இவர்கள் பொதுவாக 'லிபரல்கள்'[1] என்று அழைக்கப்பட்டார்கள். ஆனால் இவர்களுக்குள்ளேயே பல பிரிவினைகள் இருந்தன. ஒரு சிலர், போப்பரசரைத் தலைமையாகக் கொண்டு பல மாகாணங்களும் அடங்கிய ஒரு சமஷ்டியை ஏற்படுத்தவேண்டுமென்று கூறினர். இன்னொரு கட்சியினர், பீட்மாண்ட் அரசனைத் தலைவனாகக் கொண்ட

---

1 Liberals.

ஒரு முடியாட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லினர். வேறு சிலர், அரசியல் புரட்சிகள், கிளர்ச்சிகள் முதலியன ஒன்றுமே இப்பொழுது தேவையில்லையென்றும், பள்ளிக்கூடங்கள், சேவிங்ஸ் பாங்கிகள், விவசாயப் பண்ணைகள், ரெயில்வேக்கள் முதலியவைகளை ஏற்படுத்தி, இவற்றின் மூலமாக ஜனங்களின் அறிவைப் பெருக்கி, பொருளாதார நிலைமையை உயர்த்தினால், தானாகவே தேசத்தில் க்ஷேமம் ஏற்பட்டு விடுமென்று கூறினார்கள். இப்படி இவர்கள் பல மாதிரியான குரல்களில் பேசினாலும், ஒரு விஷயத்தில் மட்டும் ஒரே மாதியான அபிப்பிராய முடையவர்களாயிருந்தார்கள். அதாவது, இத்தலியிலிருந்து, ஆஸ்திரிய ஆதிக்கத்தை அப்புறப்படுத்தி விட வேண்டும். இந்த ஒற்றுமையான அபிப்பிராயத்தைத் தனக்குச் சாதகமாக உபயோகித்துக்கொள்ள வேண்டுமென்று லண்டனிலிருந்த மாஜினி தீர்மானித்தான். தேசத்தில் எந்த விதமான அரசாங்கமுறை இருக்க வேண்டுமென்பதைப்பற்றி இப்பொழுது அதிகம் வற்புறுத்திப் பேசாமல், ஆஸ்திரியாவை அப்புறப்படுத்தும் விஷயத்தில் மிதவாதிகளோடு சேர்ந்துழைக்குமாறு, இத்தலியின் பல பாகங்களிலும் சிதறிக்கிடந்தன தன் சகாக்களுக்குத் தெரிவித்தான்.

1848-ஆம் வருஷத்தை 'புரட்சி வருஷம்' என்று தான் ஐரோப்பிய இதிகாசக்காரர்கள் பெயரிட்டு அழைக்கிறார்கள். ஏனென்றால் இந்த வருஷத்தில்தான், ஒவ்வொரு நாட்டிலும், ஜனங்கள், தங்கள் தங்கள் அரசாங்கத்தினருக்கு விரோதமாகக் கிளம்பினார்கள்; சுயேச்சாதிகாரம் ஒழிய வேண்டுமென்று கூக்குர லிட்டார்கள்; ஜனாதிக்கமே இருக்க வேண்டுமென்று கோரினார்கள். இத்தலியிலும் இந்தமாதிரியான

கலகங்கள் பல இடங்களிலும் தோன்றின. ஆஸ்திரியாவின் ஆதிக்கத்திலிருந்த பெரும்பாலான மாகாணங்களில், ஜனங்கள் ஆஸ்திரியத் துருப்புக்களை விரட்டியடித்து விட்டு சுயேச்சைக் கொடியை நாட்டிவிட்டார்கள். பீட்மாண்ட் மன்னனும் டஸ்க்கனி[1] அரசனும் யுத்த முழக்கஞ் செய்துவிட்டார்கள். போப்பரசரும், நேப்பிள்ஸ்[2] வேந்தனும், தங்கள் துருப்புக்களை ஆஸ்திரியப் போர்முனைக்கு அனுப்பினார்கள். கிராம வாசிகள் பலர், தொண்டர்களாகத் தங்களைப் பதிவு செய்து கொண்டு யுத்த களத்திற்குச் சென்றார்கள். பிரபுக்கள் முதல் ஏழைக் கூலிக்காரர்கள் வரையில், பாதிரிகள் முதல் பள்ளிக்கூட மாணாக்கர் வரையில், எல்லோரும், தங்களுடைய சொந்த அலுவல்களையும் சுக சௌக்கியங்களையும் தூரத் தள்ளிவிட்டு, தேசத்தினையே குறிக்கோளாகக் கொண்டு ஆஸ்திரிய ஆதிக்கத்திற்கு விரோதமாகப் புறப்பட்டார்கள். அந்நிய ஆதிக்கத்தை அப்புறப் படுத்திவிட வேண்டுமென்பதில் இத்தாலியர்களுக்கு அவ்வளவு ஆத்திரம் இருந்தது. ஆங்காங்குச் சில்லரைச் சண்டைகள் நடைபெற்றன. ஜனங்களுக்கு எங்கும் வெற்றி! சுமார் ஒரு வார காலத்திற்குள் ஆஸ்திரியாவின் ஆதிக்கம் சின்னாபின்னப்பட்டுப் போய் விட்டது.

இந்த நற்செய்தியைக் கேட்டு மாஜினி, லண்டனிலிருந்து இத்தலிக்கு ஓடோடியும் வந்தான். 1848-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் ஏழாந் தேதி லம்பார்டி மாகாணத்தின்[3] தலைநகரான மிலானுக்குள்[4] பிரவேசித்தான். ஜனங்கள் இவனை ராஜ மரியாதையோடு

1 Tuscany.
2 Naples.
3 Lombardy.
4 Milan.

வரவேற்றூர்கள். இவனும், தன் கனவுகளெல்லாம் நனவாகிக்கொண்டு வருவதைக் குறித்துச் சந்தோஷமடைந்தான். ஆனல் இந்த நனவுகளே வெகு சீக்கிரத்தில் கனவாகிவிடப் போவது இவனுக்குத் தெரியாது. மிலான் நகரத்தில் தற்காலிகமாக ஓர் அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனல், இனி ஏற்பட வேண்டியது குடியரசா, முடியரசா என்பதைப்பற்றிக் கட்சி வேற்றுமைகள் உண்டாகிவிட்டன. ஆஸ்திரிய ஆதிக்கத்தை அடியோடு அப்புறப்படுத்துகிற வரைக்கும், இந்தக் கட்சிச் சண்டைகளைத் தள்ளிவைக்கலாமென்றும், அதுவரை எல்லோரும் தற்காலிக அரசாங்கத்தை மதித்து நடக்குமாறும் மாஜினி எவ்வளவு கூறியும், சுயநலக்காரர்கள் பலர் செவி கொடுக்கவில்லை.

இப்படிப்பட்ட உட் பிணக்குகள் ஏற்படுவது வெளிச் சத்துருவுக்குப் பெரிய சாதகமல்லவா? ஆஸ்திரியா, சிதறிப் போன தன் படைகளை ஒழுங்கு படுத்தியது; படை எண்ணிக்கையை அதிகரித்தது. எல்லா மாகாணங்களிலும் படையெடுத்து, ஜனப் படைகளைச் சீரழித்துவிட்டது. எந்தெந்த மன்னர்கள் ஆரம்பத்தில் ஆஸ்திரியாவுக்கு விரோதமாக ஆவேசத்துடன் கிளம்பினூர்களோ அவர்களெல்லோரும் இப்பொழுது ஒருவர்பின்னெருவராகச் சரணடைந்து விட்டார்கள். இழந்துவிட்ட பிரதேசங்களை யெல்லாம் ஆஸ்திரியச் சேனை மீண்டும் கைப்பற்றிக் கொண்டது. மிலான் நகரத்திலும் மேற்படி சேனை பிரவேசித்தது. இனி மாஜினி அங்கு இருக்கமுடியுமா?

எல்லா மாகாணங்களிலும் ஜனப் புரட்சி ஏற்பட்டது போல, போப்பரசருடைய நிருவாகத்தின் கீழிருந்த மாகாணங்களிலும் புரட்சி ஏற்பட்டது...

போப்பரசர் ஜனங்களுக்குத் தெரியாமல் தலை தப்பித்துக் கொள்ள வேண்டியிருந்தது. ரோமாபுரியிலுள்ள அவருடைய மாளிகையில் ஜனங்கள் சுயேச்சைக்கொடி நாட்டிவிட்டார்கள். தற்காலிக அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. நூற்றைம்பது அங்கத்தினர் கொண்ட அரசியல் நிர்ணய சபை ஒன்று தெரிந்தெடுக்கப்பட்டது. இந்தச் சபையானது, தேசத்தின் ஆட்சி முறை குடியரசே யென்றும், போப்பரசருடைய அரசியல் அதிகாரத்தை ரத்து செய்துவிடுவதாகவும், ஆனால் அவர் மதத் தலைவர் என்ற பதவியை வகித்துக் கொண்டு வரலாமென்றும் தீர்மானித்தது. தவிர, மாஜினியின் தேச சேவைகளைப் பாராட்டுவதற்கறிகுறியாக, அவனை ரோமாபுரியின் பிரஜையாக்கியது; ரோமாபுரிக்கு அவனை வரும்படி அழைப்பு அனுப்பியது. மாஜினியும் இந்த அழைப்புக் கிணங்கினான். ரோமாபுரிக்கு வந்தான். மிகுந்த ஆடம்பரத்துடன் வரவேற்கப்பட்டான். சிறிது காலம் வரை இவன் இட்டது சட்டமாக இருந்தது. ஜன சபையானது, அரசாங்க நிருவாகத்தை மூவர் அடங்கிய ஒரு சிறு குழுவினிடத்தில் ஒப்படைத்தது. இந்த மூவரில் மாஜினியே முதன்மையானவன். இம்மூவரும், தங்களுடைய அதிகாரத்தில் தங்களை இழந்துவிடாமல், ஜனங்களுடைய நன்மைகளை நாடுவதிலேயே கவனமனைத்தையும் செலுத்தினார்கள்.

இப்படியிருக்கையில், ஆஸ்திரியச் சேனைகள், தாங்கள் இழந்துவிட்ட பிரதேசங்களையெல்லாம் கைப்பற்றிக்கொண்டு வருவதையும், கலகஞ் செய்தவர்கள் ஒருவர் பின்னொருவராகச் சரணடைந்து வருவதையும் கேள்வியுற்று, கேட்டா[1] என்ற ஊருக்கு ஓடிப்போய்

1 Gaeta.

விட்ட போப்பரசர், தன் சுவாதீனத்திலிருந்த நாடுகளைச் சில 'கள்ளர்கள்' கைப்பற்றிக் கொண்டிருக்கிறார்களென்றும், அவர்களுடைய பிடியினின்று அவற்றை விடுவித்துத் தன்னிடத்தில் ஒப்புவித்து உதவுமாறும் எல்லா கத்தோலிக்க அரசாங்கங்களுக்கும் விண்ணப்பஞ் செய்துகொண்டார். குறிப்பாக, இஃது ஆஸ்திரியாவின் உதவியைக் கோரி அனுப்பப்பட்ட வேண்டுகோள்தான். ஆனால், இதற்குப் பதில், எதிர்பாராத இடத்திலிருந்து போப்பரசருக்கு உதவி கிடைத்தது.

1848-ஆம் வருஷம் பிரான்சிலும் ஒரு பெரிய புரட்சி நடைபெற்றது. இது பூரண வெற்றியடையவில்லை. இந்தக் காலத்தில் பிரான்சின் சர்வாதிகாரி போலிருந்தவன் லூயி நெப்போலியன்[1] என்பவன். இவன், தன் அதிகாரத்தை ஊர்ஜிதம் செய்துகொள்ளும் பொருட்டு, ராணுவத் தலைவர்களினுடையவும் மதாசாரியார்களினுடையவும் ஆதரவைத் தேடிக்கொண்டிருந்தான். இந்தச் சமயத்தில், போப்பரசருடைய வேண்டுகோள் இவனுக்குக் கிடைத்தது. புதிதாக ஸ்தாபிக்கப்பட்டு, குழந்தைப் பருவத்திலிருக்கும் ரோமக் குடியரசு, இவனுக்கு ஒரு தீங்குஞ் செய்யவில்லையாயினும், போப்பரசருடைய தயவைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக, ரோமாபுரியின்மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றிக்கொள்ளும் பொருட்டு எண்ணாயிரம் பேரடங்கிய ஒரு படையை தளபதி 'அவ்டினாட்[2] என்பவனுடைய தலைமையின்கீழ் அனுப்பினான். ரோமாபுரிக் குடியரசு அரசாங்கத்தினர், எதிர்

1 Louis Napoleon 1808—1873. இவனை மூன்றாவது நெப்போலியன் என்று சொல்வதுமுண்டு.

2 General Audinat.

பாராத இந்த எதிர்ப்பைக் கண்டு திகைத்துப் போய் விட்டனர். மாஜினி இந்தப் படையெடுப்பை எதிர்த்து நிற்பதென்று தீர்மானித்தான். நல்ல தருணத்தில் இவனுக்கு காரிபால்டியின்[1] உதவி கிடைத்தது. இந்த காரிபால்டியைப் பற்றி இங்குச் சிறிது தெரிந்து கொள்வது நல்லது.

காரிபால்டி, 1807-ஆம்வருஷம் நைஸ்[2] என்னும் நகரத்தில் பிறந்தான். பாலியத்திலேயே மாலுமித் தொழிலில் பயிற்சி பெற்றிருந்தானாதலின், நல்ல தேகக்கட்டும், கஷ்டங்களைச் சமாளிக்கிற ஆற்றலும் இவனுக்கு ஏற்பட்டன. 1833-ஆம் வருஷம் 'யௌவன இத்தலி' சங்கத்தில் அங்கத்தினனாகச் சேர்ந்தான். 1834-ஆம் வருஷம் ஜினோவா நகரத்தில் நடைபெற்ற ஒரு புரட்சியில் இவன் சம்பந்தப்பட்டிருந் தானென்று சொல்லி அரசாங்கத்தார் இவனுக்கு மரண தண்டனை விதித்தனர். ஆனால் இவன், பிரான்சுக்குத் தப்பியோடிவிட்டான். அங்கிருந்து 1836-ஆம் வருஷம் தென்னமெரிக்காவுக்குச் சென்று, ரையோ கிராண்டி[3] என்ற ஒரு குடியரசு நாட்டின் சேனைத் தலைவனாக நியமிக்கப்பட்டு, அங்குத் தன் போர்த் திறமைகளைக் காட்டினான். 1848-ஆம் வருஷம் இத்தலியெங்கணும் புரட்சிகள் நடைபெறுகின்றனவென்பதை அறிந்து, தாய் நாட்டின் விடுதலையில் தானும் பங்கு கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் இத்தலிக்குத் திரும்பி வந்தான். ஒரு பெரிய தொண்டர் படையைச் சேர்த்துக்கொண்டான். ஆஸ்திரியர்களுக்குப் பலவித துன்பங்களை விளைவித்தான். பின்னர், ரோமாபுரிக் குடியரசை ஸ்தாபிக்கிற முயற்சியில்

1 Garibaldi 1807—1882.

2 Nice.

3 Rio Grande.

மாஜினியோடு சேர்ந்துழைத்தான். பிரெஞ்சுப் படை, ரோமாபுரியை வந்து தாக்கியபோது, காரிபால்டி ஒரு பெரிய படைக்குத் தலைமை பூண்டு எதிர்த்து நின்றான். கடைசியில் இவனால் சமாளிக்க முடியவில்லை. மூவாயிரம் பேருடன் ரோமாபுரியிலிருந்து தப்பிச் சென்றுவிட்டான். இங்ஙனம் இவன் திரும்பிச் சென்ற காலத்தில் பட்ட இன்னல்கள் பல. 1860-ஆம் வருஷம் நேபிள்ஸ் ராஜ்யத்தின் கீழிருந்த சிஸிலி தீவு வாசிகள். அரசாங்கத்திற்கு விரோதமாகக் கிளம்பினார்கள். காரிபால்டி, அவர்களுக்குத் துணை செய்யும் பொருட்டு, ஒரு பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு சென்று வெற்றி கண்டான். நேபிள்ஸைக் கைப்பற்றிக் கொண்டான். இதனால், நேபிள்ஸுக்கும் சிஸிலிக்கும் சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டான். பின்னர், இந்த இரண்டு பிரதேசங்களும் ஐக்கிய இத்தலியுடன் சேர்க்கப்பட்டு முடியாட்சிக்குட்படுத்தப்பட்ட போது, இவன், தன் பதவியை விட்டுக் கொடுத்தான். இந்தச் சமயத்தில் இவனுக்கு அநேக கௌரவங்கள் வழங்கப்பட்டன. ஆனால் இவன் அனைத்தையும் மறுத்து விட்டான். இதனால் தேச மக்களின் மதிப்பிலே இன்னும் உயர்ந்தவனானான். கடைசியில் காப்ரேரா[1] என்னும் ஊரில் ஒதுங்கி வாழ்ந்து 1882-ஆம் வருஷம் இறந்து போனான்.

இனி ரோமாபுரிக் கதைக்கு வருவோம். ரோமாபுரியில் பிரெஞ்சுப் படையை எதிர்த்து நிற்கும் பொறுப்பு காரிபால்டி வசம் ஒப்படைக்கப்பட்டது. பிரெஞ்சுப் படையானது, சுமார் ஒருமாத காலம் ரோமாபுரியை முற்றுகை யிட்டது. காரிபால்டியின் தலைமையில் ரோமர்கள் மிகத் துணிவுடன் எதிர்த்து நின்றனர். ஆயினும் பிரெஞ்சுப் படை எண்ணிக்கை

[1] Caprera.

யிலும் ஆயுத பலத்திலும் மேலோங்கி நின்றது. எனவே ரோமாபுரி ஜன சபையானது சரணடைந்து விடுவதாகத் தீர்மானித்து விட்டது. மாஜினி மட்டும் சரணடையக் கூடாதென்று கடைசி வரை போராடினுன். ஆனுல் இவன் கட்சிக்கு ஆதரவில்லை. எனவே, மூவர் சபையிலிருந்து விலகிக் கொண்டு விட்டான். ஏனென்ருல், தன்னுடைய தலைமையின் கீழ் ரோமாபுரி சரணடைந்ததாக இருக்கக்கூடா தென்பது இவன் எண்ணம். பிரெஞ்சுப் படையானது, வெற்றி முழக்கஞ் செய்துகொண்டு 1849-ஆம் வருஷம் ஜூலை மாதம் மூன்ருந் தேதி 'புனித ரோமாபுரி'க்குள் பிரவேசித்து விட்டது. போப்பரச ரின் ஆதிக்கம் மீண்டும் ரோமாபுரி முதலிய பிரதேசங் களில் ஊர்ஜிதமாயிற்று.

காரிபால்டி, தனது மூவாயிரம் தொண்டர்களுடன், பிரெஞ்சுக்காரர்களிடம் சரணடையக் கூடாதென்று, ரோமாபுரியைவிட்டு ஓடிவிட்டான். இந்தக் காலத்தில் இவன் பட்ட கஷ்டங்களை, இத்தாலிய இதிகாசக் காரர்கள் கண்ணீரில் எழுதுகோலைத் தோய்த்துக் கொண்டு எழுதியிருக்கிருர்கள். ஆனுல் மாஜினி, ரோமாபுரியிலேயே இருந்தான். காரிபால்டியுடன் ஓடிப் போகவுமில்லை; பிரெஞ்சுக்காரரிடம் சரணடை யவுமில்லை. பிரெஞ்சுக்காரரும் இவனைக் கைதி செய்யவோ, சுட்டுக் கொல்லவோ இல்லை. இவன் நிரம்பச் சோர்வடைந்திருந்தான். முற்றுகை ஆரம் பித்த காலத்திலிருந்து இவன் ஒரு நாள்கூட படுக் கையில் படுத்துறங்கியதில்லை. சரியான ஆகாரமும் கிடையாது. இவ்வளவெல்லாம் கஷ்டப்பட்டும் பயன் ஒன்றுமில்லை. இஃது இவன் மனத்தை அரித்துவிட்டது.

சுமார் இரண்டு மாதங்களுக்குள் இவனுடைய ரோமங்கள் நரைத்துப்போய் விட்டன; முகத்திலே சுருக்கங்கள் நிறைய உண்டாகிவிட்டன. இவன் பழைய மாஜினியா வென்று இவனோடு பழகியவர்கள் ஆச்சரியப்பட்டுப் போனார்கள்.

# 8. அஸ்தமனம்

உள்ளத்திலும் உடலிலும் சோர்ந்துபோன மாஜினி, கடைசியில் ரோமாபுரியை விட்டுவிட்டு ஸ்விட்ஜர் லாந்தின் வழியாக இங்கிலாந்து போய்ச் சேர்ந்தான். இதற்குப் பிறகு இவனுடைய வாழ்நாள் முழுவதும், இடையிடையே சில சில வருஷங்கள் தவிர, லண்டனி லேயே கழிந்தது. 1850-ஆம் வருஷத்திலிருந்து — அதாவது இவனுடைய நாற்பத்தைந்தாவது வயதி லிருந்து—இவனுடைய வாழ்நாளை வாழ்ந்த நாளென்று சொல்ல முடியாது; வீழ்ந்த நாளென்றுதான் சொல்ல வேண்டும். இந்தக் காலத்திலிருந்து இவனுடைய அஸ்தமன வாழ்வு ஆரம்பித்துவிட்டது.

லண்டனில் இவனுடைய பழைய நண்பர்கள் இவனைப் பழைய உற்சாகத்தோடு வரவேற்ருர்கள். ரோமாபுரி யுத்தத்தில் இவன் தோல்வியுற்றுப் போனாலும், அந்தக் காலத்தில் இவன் பட்ட கஷ்டங்கள், செய்த தியாகங்கள் முதலியனவெல்லாம் ஆங்கில அரசியல் வாழ்வில் இவனுக்குக் கட்டியங் கூறிக்கொண்டு நின்றன. பிற்காலத்தில் அரசியல் அறிஞர்கள் இவனைப் பாராட்டியதற்கும் ஸ்வின்பர்ன்[1] போன்ற பிரபல கவிஞர்கள் இவனைப் புகழ்ந்து பாடிய தற்கும் இவைகளே காரணமாயிருந்தன. ஆனல் மாஜினி, புகழொளியிலே, பொருளாசையிலே தன்னை இழந்துவிடக் கூடியவனல்ல; தன் கடமையை மறந்து விடக் கூடியவனல்ல. தாய் நாட்டுச் சேவை என்பது

1 Swinburne 1837—1909.

இவனோடு ஒன்றிப்போன ஓர் அமிசமாயிருந்தது. எத்தனை தரம் தோல்வியுற்றால் என்ன, எத்தனை பேருடைய தூற்றுதல்களுக்கு ஆளானால்தானென்ன, இவன், இத்தலியை எப்படி அந்நிய ஆதிக்கத்தினின்று விடுதலை செய்வது, எங்ஙனம் ஐக்கிய இத்தலியைச் சிருஷ்டிப்பது, எவ்வாறு குடியரசை ஸ்தாபிப்பது என்பவைகளைப்பற்றிப் பல திட்டங்கள் போட்டுக் கொண்டிருந்தான். "என்னுடைய இருதயத்தைத் திறந்து பாருங்கள். அதன் உட்புறத்தில் இத்தலி என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருக்கும்" என்று இவன் அடிக்கடி நண்பர்களிடம் சொல்வான். இவனுடைய தாயார் 1852:ஆம் வருஷம் — அதாவது இவனுடைய நாற்பத்தேழாவது வயதில் — இறந்து போனாள். அப்பொழுது இவன் புலம்பிய புலம்பல் இவனுடைய நாட்டுப்பற்றை நன்கு விளக்குகின்றது.

"அவளுடைய ஸ்தானத்தைப் பூர்த்தி செய்யக் கூடியவர் இந்த உலகத்தில் வேறு யார் இருக்கிறார்? இத்தலி சுதந்திரமடைந்து பார்க்க அவள் கொடுத்து வைக்கவில்லையே. ஆனால் அவள் — என் தாயார் — உயிரோடிருந்த போது எவ்வளவு சமீபத்தில் இருந்தாளோ அதைவிடச் சமீபமாக இப்பொழுது — இறந்த பிறகு — இருக்கிறாள். என்னுடைய கடமைகள் என்னென்னவென்று அவள் அங்கீகரித்து வந்தாளோ அந்தக் கடமைகளின் புனிதத் தன்மையை இப்பொழுது நான் அதிகமாக உணர்கிறேன். இந்தப் பூலோகத்திலே இனி எனக்கு வேறு தாயில்லை. எனது நாடுதான் எனக்குத் தாய். என் தாய் என்னிடம் எப்படி உண்மையோடு நடந்துகொண்டாளோ அதைப் போல் எனது தேசத்தினிடமும் நான் நடந்து கொள்வேன்."

இத்தலியின் சுதந்திரப் போராட்டத்திற்கு, இங்கிலாத்திலுள்ளவர்களின் அநுதாபத்தையும் ஆதரவையும் பெறும் பொருட்டு மாஜினி லண்டனில் 'இத்தலியின் நண்பர்கள் சங்கம்'[1] என்ற ஒரு சங்கத்தை 1851-ஆம் வருஷம் ஸ்தாபித்து, அதில் அடிக்கடி, இத்தலியைப் பற்றிப் பிரசங்கங்கள் செய்து வந்தான்.

இவனுடைய தாயார் இறக்கிறபோது, இவனுக்கு வருஷந்தோறும் ஒரு சிறு தொகை கிடைக்குமாறு ஒரு சேம நிதி ஏற்படுத்திப் போயிருந்தாள். இந்தத் தொகை, இவனுடைய லண்டன் வாழ்க்கையில் மிகவும் பயன்பட்டது. இது தவிர பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதி அதன் மூலமாகவும் சிறிது சம்பாதித்தான். பொதுவாக இவனுடைய பொருளாதார நிலைமை, முந்திய தடவையைக் காட்டிலும் சிறிது மேலாக இருந்தது. இங்ஙனம் சம்பாதித்த பணத்தைக் கொண்டு இவன், தன் சொந்த சௌகரியங்களை அதிகப்படுத்திக் கொள்ளவில்லை. முன் போலவே, அநாதைகளை ஆதரிப்பது, தொழிலாளர்களுக்கு இராப்பள்ளிக்கூடங்கள் நடத்துவது போன்ற காரியங்களுக்காகச் செலவழித்தான்.

இவன் இங்ஙனம் லண்டனில் வாழ்ந்து வந்த காலத்தில் இத்தலியில் நிலைமை எப்படியிருந்தது என்பதைச் சிறிது கவனிப்போம். 1848-ஆம் வருஷம் இத்தலியின் பல பாகங்களிலும் நடைபெற்ற புரட்சி தோல்வியுற்றுப் போனதானது, இத்தாலிய அரசியல் வாதிகளுக்குள்ளே பெரிய மன மாற்றத்தை உண்டு பண்ணி விட்டது. ஒழுங்கான ராணுவப் பயிற்சி

1 Society of the Friends of Italy.

யில்லாத தொண்டர் படைகளின் உதவியைக்கொண்டு புரட்சியில் வெற்றிபெற முடியாதென்றும், இந்தத் தோல்விகளினால் அந்நிய ஆதிக்கமானது இன்னும் பலமாக ஊர்ஜிதமடைவதோடு, அதற்கு மதிப்பும் ஏற்பட்டு விடுகிறதென்றும், தவிர அடிக்கடி ஏற்படும் இந்தப் புரட்சிகளினால் ஜனங்களுக்கு அதிகமான கஷ்ட நஷ்டங்கள் உண்டாகின்றனவென்றும் இவர்கள் உணர்ந்தார்கள். இதே சமயத்தில், போப்பரசரிடமும் ஜனங்களுக்கு ஒருவித வெறுப்பு ஏற்பட்டு விட்டது. ரோமாபுரிக் குடியரசை நசுக்க, அவர் பிரான்சின் உதவி பெற்றது யாருக்குத்தான் பிடிக்கும்? பீட்மாண்ட் அரசனுடையவும், அவன் ராணுவத்தி னுடையவும், அவன் மந்திரிமார்களினுடையவும் உதவி யைக் கொண்டுதான் இத்தலிக்கு விமோசனம் கிடைக்கக்கூடுமென்றும், பீட்மாண்ட் அரசனுடைய கொடியின் கீழ் எல்லோரும் ஒன்றுபட்டு ஆஸ்திரிய ஆதிக்கத்தை அப்புறப்படுத்துவதுதான் முதலிற் செய்யவேண்டிய வேலையென்றும், குடியரசுப் பிரச்னையைப் பின்னர் தள்ளி வைத்துக்கொள்ளலா மென்றும், இந்த நோக்கங்களைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமானால், ராஜதந்திர முறைகளைக் கையாளவேண்டுமே தவிர, புரட்சி முறைகளைக் கையாளக்கூடாதென்றும் கருதினார்கள். மாஜினி யோடு சேர்ந்து 'யௌவன இத்தலி' சங்கத்தில் உழைத்தவர்கள் பலரும் இந்த மாதிரியான அபிப்பிரா யங்களைக் கொள்ளலானார்கள். ஆனால் மாஜினிக்கு இவையெல்லாம் பிடிக்கவில்லை. நெறி முறையில்லாத ஓர் அரசனாலும், தந்திர சாலியான மந்திரிகளாலும் இத்தலிக்கு விமோசனம் கிடைக்குமென்று இவனால் நம்பக்கூடவில்லை.

இந்தக் காலத்தில் பீட்மாண்ட் சிங்காதனத்தில் வீற்றிருந்தவன் இரண்டாவது விக்டர் இமானுயுவல்[1] என்பவன். இவன் 1849-ஆம் வருஷம் பட்டத்துக்கு வந்தான். அப்பொழுது இவனுக்கு இருபத்தொன்பது வயது. அந்த வருஷத்தில், இத்தலி யெங்கணும் ஒருவித சோர்வு குடி கொண்டிருந்தது. ஏனென்றால் முந்திய வருஷத்தில் நடைபெற்ற புரட்சிகளெல்லாம் தோல்வியுற்றுப் போயின வல்லவா?

விக்டர் இமானுயுவலுக்குப் பிரதம மந்திரியா யிருந்தவர்களில் முக்கியமானவன் காவர்[2] என்பவன். இவன் 1810-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் பத்தாந் தேதி டூரின்[3] என்ற நகரத்தில் ஒரு பிரபு வமிசத்தில் பிறந்தான். இவன் சிறுவயதிலிருந்தே ஆங்கில அரசியலில் பழக்கம் பெற்ருன். இங்கிலாந்தில் பல வருஷ காலம் வசித்தான். பின்னர் இத்தலிக்கு வந்து பீட்மாண்ட் பார்லிமெண்ட்டில் ஓர் அங்கத்தினனுக முயன்ருன். பல தடவை தோல்வியுற்ருன். கடைசியில் ஒரு முறை வெற்றிபெற்று அப்பொழுதிருந்து தொடர்ந்து அரசாங்கத்திலே பதவி வகித்துக்கொண்டு வந்தான். பின்னர் 1852-ஆம் வருஷம் பிரதம மந்திரியானுன். இந்தக் காலத்திலிருந்து இவனுடைய ராஜதந்திரம் பிரகாசிக்கத் தொடங்கியது. ஆஸ்திரியாவை நேரடியாகத் தாக்கக் கூடிய சக்தி பீட்மாண்டுக்கு இல்லையென்பது இவனுக்குத் தெரியும். இதற்காக இவன் முதலில் பிரெஞ்சு அரசனுகிய மூன்ருவது நெப்போலியனுடன்[4] ஒரு சிநேக ஒப்பந்தம் செய்து

1 Victor Emmanuel II : 1820—1878.

2 Cavour 1810—1861.

3 Turin.

4 லூயி நெப்போலியன் என்றும் இவனைக் கூறுவதுண்டு.

கொண்டான். மெதுவாக ஆஸ்திரியாவுக்கு விரோதமாக பிரான்ஸைத் தூண்டிவிட்டான். 1859-ஆம் வருஷம் ஆஸ்திரியாவுக்கும் பிரான்ஸுக்கும் யுத்தம் மூண்டது. அதே சமயத்தில், காவர், ஆஸ்திரியாவினுடைய செல்வாக்கின் கீழிருந்த மாகாணங்களையெல்லாம் தாக்கித் தோல்வியுறச் செய்து, பீட்மாண்டின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்துவிட்டான். இந்த மாகாணங்களுக்கு உதவி செய்துவந்த சொற்ப ஆஸ்திரியச் சேனைகள் ஆங்காங்கு முறியடிக்கப்பட்டன. இதே சமயத்தில், போப்பரசரின் ஆதிக்கத்தின் கீழிருந்த தெற்கு இத்தாலியப் பிரதேசங்கள் அந்தப் போப்பரசருக்கு விரோதமாகக் கிளம்பின. காரிபால்டியின் உதவியைக் கொண்டு காவர், இந்தக் கலகங்களை பீட்மாண்டுக்குச் சாதகமாக உபயோகித்துக்கொண்டான். போப்பரசரின் ஆதிக்கம் இந்தப் பிரதேசங்களில் ஒழிந்தது. இவை யாவும் பீட்மாண்டின் கீழ் வந்தன. 1861-ஆம் வருஷம் விக்டர் இமானுயுவல், இத்தலியின் மன்னன் என்ற பெயரால் டூரின் என்ற நகரத்தில் பட்டஞ் சூட்டப்பட்டான். இதே வருஷம் காவரும் இறந்து போனான். இத்தாலிய ஒற்றுமையில் பாதி நிறைவேறியது. ஆனால் இன்னும் ரோமாபுரி, போப்பரசருடைய ஆதிக்கத்திலும், வெனிஸ், ஆஸ்திரியாவின் ஆதிக்கத்திலும் இருந்தன. இவற்றையெல்லாம் இத்தலியின் சுவாதீனத்திற்குக் கொண்டு வர காரிபால்டி பெரு முயற்சிகள் செய்தான். இத்தாலிய இதிகாசத்திலே இவை மகா அற்புதமான பாகம். சுருக்கமாகச் சரித்திரத்தை முடிப்போம். 1371-ஆம் வருஷம் ரோமாபுரி முதலிய பிரதேசங்கள் விக்டர் இமானுயுவலின் ஆதிக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டன. ஐக்கிய இத்தலி உதயமாயிற்று. ஆனால்

மாஜினுயின் அரசியல் வாழ்வு அஸ்தமித்தது. அவன் உலக வாழ்வு மறையுந் தறுவாயிலிருந்தது.

காவர், காரிபால்டி ஆகிய இரண்டுபேருடைய முயற்சிகளின் பேரில் ஐக்கிய இத்தலி உருவாகிக் கொண்டிருந்த சமயத்தில், லண்டனில் வசித்து வந்த மாஜினி, இத்தலியில் அடிக்கடி ரகசியப் புரட்சிகள் கிளப்பிவிட்டுக் கொண்டிருந்தான். காவர், காரிபால்டி இவர்களின் போக்கு இவனுக்குச் சிறிதுகூடப் பிடிக்க வில்லை. எனவே, இவர்களுக்கு விரோதமாகவும் பிரசாரஞ் செய்ய ஆரம்பித்தான். ஆனால் இத்தலியில் இவனுக்கு முன்போல் செல்வாக்கில்லை. சமுதாயத்தின் மேல் படியிலிருந்தவர்கள், 'லிபரல்கள்' என்று தங்களைச் சொல்லிக்கொண்டு காவரையும் விக்டர் இமானுயுவலையும் ஆதரித்தார்கள்; கீழ்ப்படியிலிருந் தவர்களான தொழிலாளர் முதலியோர், மார்க்ஸின்[1] சமதர்ம சித்தாந்தத்தை ஆதரித்து வந்தார்கள். இந்தக் காலத்திலேயே, மார்க்ஸீயர்கள், மார்க்ஸீயத்தை எதிர்த்து வந்த மாஜினியின் உதவி பெற்றே, மார்க்ஸீயத்தை இத்தலியில் பரப்பிவிட்டார்கள். கார்ல் மார்க்ஸூம், அவனுடைய சகாவாக அந்தக் காலத்திலிருந்த பக்குனின்[2] என்பவனும் தன்னை ஏமாற்றிவிட்டதாக மாஜினி கருதினான். இதற்காக அவர்கள்மீது இவனுக்கு ஆழ்ந்த வெறுப்பு ஏற்பட்டு விட்டது. சமுதாயத்தின் மத்திய வகுப்பைச் சேர்ந்த ஒரு சிலர் மட்டும், 'மாஜினியர்கள்' என்று தங்களை அழைத்துக்கொண்டு ஆங்காங்குப் புரட்சி செய்து

---

1 **Karl Marx 1818—1883.** *இவனது வாழ்க்கையைப்பற்றிய விவரங் களுக்கு* **கார்ல் மார்க்ஸ்** *(பி. ஜோ. பி. 9) என்ற நூலைப் பார்க்க.*

2 **Bakunin 1814—1866.**

வந்தார்கள். இந்தப் புரட்சிகளையெல்லாம் மாஜினி ஆதரித்து வந்தான். இவர்களுடைய புரட்சிகள் வெற்றி பெறக்கூடுமென்று தவருக நம்பி, அநேக சந்தர்ப்பங்களில் மாறு வேஷம் போட்டுக்கொண்டு இவனே நேரில் இத்தலிக்கு வந்தான். மறைமுகமாக இருந்து சில புரட்சிகளை நடத்தினன். ஆனல் ஒன்றுகூடப் பலிக்கவில்லை. இப்படி இவன் ஒளிவுமறைவாக இத்தலியின் பல பாகங்களுக்கும் வந்தது ஏறக்குறைய ஐந்து அல்லது ஆறு தடவை இருக்கும். இவன் கோரியதும் பாடுபட்டதும் குடியரசு இத்தலிக்காக. ஆனல் இவன் கண்டது முடியாட்சி இத்தலி!

போராட்டத்திலேயே பிறந்து, போராட்டத்திற்காகவே வாழ்ந்த மாஜினியின் உடலம் வயோதிகத்தினல் தளர்ச்சி யடைந்தது; மனம, தோல்விக்கு மேல் தோல்வி ஏற்பட்டு வந்ததனல் தளர்ச்சி யடைந்தது. "இந்த வாழ்க்கை யந்திரம், எழுதி, எழுதி, முப்பத்தைந்து வருஷங்களாக எழுதிக் களைத்துப்போன இந்த யந்திரம், இப்பொழுது எனக்கு ஒரு பெருஞ் சுமையாயிருக்கிறது. என்ன ஆச்சரியம்!" என்று இவன் வருத்தப்படுகிருன். இவனுடைய அந்திம காலத்தில், இவனுடன் யாரார் நெருங்கிப் பழகினர்களோ அவர்களெல்லோரும் இவனுடன் பிணங்கிக் கொண்டார்கள். ஜீவிய தசையிலிருந்த இவனுடைய ஒரே சகோதரி இவனை வந்து பார்க்கக் கூட மறுத்து விட்டாள். இவனேடு பல அரசியல் போராட்டங்களிலே கலந்துகொண்ட காரிபால்டியும் இவனிடம் மனஸ்தாபப்பட்டுக் கொண்டுவிட்டான். கஷ்டங்கள் வந்தால் ஒன்றுக்குமேல் ஒன்ருகத்தானே வரும்! ஆனல் மாஜினி இவைகளை யெல்லாம் பொருட்படுத்தவில்லை. தான் ஆரம்பித்த வேலை

தொடர்ந்து நடைபெற வேண்டுமென்பதுதான் இவன் கவலை. "இந்த மண்ணின் மீது நான் இன்னும் எத்தனை வருஷங்கள் அல்லது எத்தனை மாதங்கள் இருந்தாலென்ன? நான் வேறோரிடத்திற்கு வேலை செய்யச் சென்று விடுவதனாலேயே உங்களைக் குறைவாக நேசிக்கிறேனென்று அர்த்தமில்லையே. அப்படியே நீங்கள் என்னை நேசிக்கிறீர்களென்று சொன்னால், என் வேலையைத் தொடர்ந்து செய்துகொண்டு வருவதன் மூலமாகத்தான் நேசிக்கிறீர்கள் என்று அர்த்தம். உங்களனைவரையும் நான் விட்டுப் பிரிந்து சென்ற பிறகு என் வாழ்நாள் வீணாகிப் போகாமல் தடுக்கும் பொருட்டு, நீங்கள் இன்னும் அதிக நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் வேலை செய்வீர்களல்லவா?" என்று தன்னைச் சுற்றியுள்ள நண்பர்களைப் பார்த்துக் கூறினான். இத்தாலியத் தொழிலாளர்களுக்குக் கடைசி முறையாக இவன் பின்வருமாறு உபதேசித்தான்:— "இந்தப் பெருமை வாய்ந்த, ஆனால் துரதிருஷ்டம் நிறைந்த நமது தாய் நாட்டை நேசியுங்கள்; அதற்காக உழையுங்கள். மேலான பாதையில் செல்ல வேண்டுமென்பதே இதற்கேற்பட்ட நியதி. ஆனால் அந்தப் பாதையை அறியாதவர்களால், அறிந்துகொள்ள மறுக்கிறவர்களால் இது தடுக்கப் பட்டிருக்கிறது. அந்தத் தடைகளை விலக்கிக்கொண்டு செல்லுங்கள். அதுதான், என்னை நீங்கள் உண்மையாக நேசிக்கிறீர்கள் என்பதற்கு அடையாளம்." மற்றவர்களை உழைக்கச் சொன்னதோடல்லாமல், இவன், தனது கடைசி மூச்சு இருக்கிற வரையில் உழைத்து வந்தான். இந்தக் காலத்தில் நோய்வாய்ப் பட்டிருந்த தன் நண்பன் ஒருவனுக்கு இவன் எழுதிய ஒரு கடிதத்தில் பின் வருமாறு குறிப்பிட்டிருக்கிறான்:—

"உனக்கு உடம்பு சௌகரியமில்லையென்று கேள்விப்

படுகிறேன். நோய்வாய்ப் படாதே. தேசங்களெல்லாம் சுதந்திரத்திற்காகப் போராடிக்கொண்டிருக்கிற போது, நோயாகி விட்டேனென்று சொல்வது மிகக் கேவலம்.''

கடைசியில் 1872-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் பத்தாந் தேதி ஞாயிற்றுக்கிழமை எந்த ஜினோவாவிலே இவன் பிறந்தானே அந்த ஜினோவாவுக்குத் தெற்கேயுள்ளதும், சாய்வுக் கோபுரத்திற்குப் பிரசித்தி பெற்றதுமான பைஸா[1] நகரத்தில், இவனுடைய ஒளி வீசிக்கொண்டிருந்த கண்கள் சாசுவதமாக மூடிவிட்டன. பின்னர், இவன் விருப்பப்படியே, ஜினோவா நகரத்தில் இவனுடைய தாயாரின் கல்லறைக்குப் பக்கமாக இவன் அடக்கம் செய்யப்பட்டான்.

மாஜினியிடம் யாரார் என்னென்ன விதமான குற்றங் குறைகளைக் கண்டுபிடித்த போதிலும், இவன் ஓர் உத்தம புருஷன் என்பதில் யாருமே குறை கூற முடியாது. இவனுடைய அந்தரங்க வாழ்க்கை பளிங்கு போல் மாசுமறுவற்றிருந்தது. சில சமயங்களில் இவன், தன் எதிரிகளைப் பலமாகத் தாக்கியிருக்கிறானென்பது உண்மை. ஆனால் இவன் கீழான முறையில் கோபமூட்டப்பட்டான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இவனுடைய பரிசுத்தமான உள்ளத்திலே, விசாலமான இருதயத்திலே, அற்பத்தனத்திற்கோ கோழைத் தனத்திற்கோ இடமிருக்கவில்லை. ஐரோப்பிய அரச சபைகளிலே தன் பெயர் பயத்தோடு உச்சரிக்கப்படுகிறதென்பது இவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்த காலத்தில் கூட இவன் சிறிதளவு

---

[1] Pisa.

கர்வமுங் கொண்டது கிடையாது. இவன் எல்லோ ரிடத்திலும் அன்பு செலுத்துவான்; பணிவோடு பேசுவான். பெரிய மனிதனென்றும் சிறிய மனித னென்றும் எவ்வித வித்தியாசமும் பாராட்ட மாட்டான். யார் இவனிடத்தில் ஆறுதல் பெற வந்தாலும் அவர்களுக்கு உடனே ஆறுதல் கிடைக்கும். சோர்வுற்று வந்திருந்தால் அவர்களோடு சில நிமிஷங் களே பேசி உற்சாகப்படுத்தி விடுவான். "தான் வருந்திப் பிறர்க்குதவும்" "தண்ணளியான்; செம் மனத்தான்." தனக்கு யாரேனும் கடுகத்தனை உதவி செய்தாலும் அதற்கு மலையத்தனை நன்றி பாராட்டு வான். ஆனால், தான் யாருக்கேனும் மலையத்தனை உபகாரஞ் செய்திருந்தாலும் அதற்குக் கடுகத்தனை நன்றியையும் எதிர்பார்க்க மாட்டான். மற்றவர் களுடைய துன்பத்தைக் கண்டு கண்ணீர் உகுப்பான். ஆனால் இவன் அனுபவித்த துன்பங்களோ சிறு சிறு குன்றங்களாக இவனுடைய வாழ்க்கைப்பாதையை மறைத்துக்கொண்டிருந்தன.

எல்லா ஜீவராசிகளிடத்திலும் இவன் பாரபட்ச மில்லாமல் அன்பு செலுத்தி வந்தான். சிறைவாசத் தின்போதும் தனி வாசத்தின் போதும் இவனுக்கு ஆறுதல் கொடுத்தவை ஒரு பூனையும் சில பட்சிகளு மாகும். மானிட சமுதாயத்தினிடம் அன்பு செலுத்து வது, அதற்குத் தொண்டு செய்வது என்பவை இவனைப் பொறுத்தமட்டில் வெறுந் தத்துவங்களா யிருக்கவில்லை; இவனுடைய புருஷத் தன்மையிலே கலந்த அமிசங்களாக, பிரிக்க முடியாத அமிசங்களாக இருந்தன. கடமையென்பதும் இப்படித்தான் இவன் விஷயத்தில். தன்னை மறந்துகூட கடமையை மறந்து விடக்கூடாதென்பது இவன் கவலை. மனச்சாட்சிப்படி

கடமைகளைச் செய்துகொண்டு போகிற ஒரு பௌதிக வாதியல்லன் மாஜினி. தெய்விக சக்தியொன்று. மனித முயற்சி ஒவ்வொன்றையும் கவனித்துக் கொண்டு வருகிற தென்பது இவன் திடமான நம்பிக்கை.

ஓர் அறிஞன் மாஜினியைப் பின்வருமாறு மதிப் பிடுகிருன்.

"இவன்,—மாஜினி—தன் லட்சியத்தை தன் வாழ்க்கையிலேயே விகசித்துக் காட்டினுன். தொடர்ந்து வினையாற்றித் தன் புருஷத்துவத்தை வெளிப்படுத்தினுன். இவனுடைய (வாழ்க்கையாகிற) நாடகத்தில் இவனே சோகநாயகன்; லட்சியத்தை யடைவதற்காக எல்லாத் துன்பங்களையும் தானே வலிந்து ஏற்றுக்கொண்ட வீரபுருஷன்."

உலகத்தில் அகத் தூய்மைக்கும் மனிதத் தன் மைக்கும் மதிப்பு இருக்கிறவரையில், அதிகாரத்தைக் காட்டிலும், வெற்றியைக் காட்டிலும், துறவுதான் மேலானது, கடமைதான் உயர்ந்தது என்று மனிதர்கள் கௌரவித்துக்கொண்டிருக்கிற வரையில், எவனுடைய பெயர் இத்தலியில் முழங்கிக்கொண்டிருக்குமோ அவனுடைய பெயர்தான் மாஜினி.

# முக்கிய நிகழ்ச்சிகள்

(மாஜினி வாழ்க்கையில்)

— ❋ —

| ஆண்டு | நிகழ்ச்சி |
|---|---|
| 22—6—1805 — | மாஜினி ஜிநோவாவில் பிறந்தது. |
| 1814—1815 — | வியன்னு காங்கிரஸ். |
| 18—6—1815 — | வாட்டர்லூ யுத்தம். நெப்போலியனின் தோல்வி. |
| 15—7—1815 — | நெப்போலியன் சரணடைந்தது. அவன் செயிண்ட் ஹெலீனு தீவுக்கு அனுப்பப்பட்டது. |
| 1815 — | இத்தலியை, பல சுயேச்சாதிகாரிகள் பங்கு போட்டுக் கொள்ளத் தொடங்கியது. ஆஸ்திரியாவின் ஆதிக்கம் மேலோங்கி யிருந்தது. |
| 1819 — | மாஜினி மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் தேறியது. |
| 1821 — | தாய்நாடு, சுதந்திரம் பெறப் பாடுபட வேண்டுமென்ற உணர்ச்சி பெற்றது. |
| 1826 — | சட்டப் பரீட்சையில் தேறியது. |
| 1829 — | கார்போனரி சங்கத்தில் சேர்ந்து கொண்டது. |

1830 — கைதியானது; ஸாவோனு சிறைக்கு அனுப்பப்பட்டது. சிறையில் 'யௌவன இத்தலி' சங்கத்துக்கான திட்டங்கள் வகுத்தது.

1831 — ஆறு மாத வாசத்திற்குப் பிறகு ஸாவோனு சிறையிலிருந்து வெளிவந்தது. உடனே தேசப் பிரஷ்டம். மார்சேல் நகரம் வந்து தங்கியது.

1832 — அங்கு 'யௌவன இத்தலி' சங்கம் ஸ்தாபிதமானது.

1833 — மார்சேலிலிருந்து ஜினீவா நகரம் சென்றது; அங்குப் பல அல்லல்களுக்குட்பட்டது. ஆயினும் இத்தலியில் புரட்சிகள் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்தது.

1837 — லண்டன் அடைந்தது.

1837—1848 — லண்டன் வாசம். பல சங்கங்களை ஸ்தாபித்தது; சமுதாய சேவைகளில் ஈடுபட்டது; மனிதன் கடமை என்ற நூலின் ஒரு பகுதியைக் கட்டுரைகளாக வெளியிட்டது.

1848 — ஐரோப்பாவெங்கணும், புரட்சிகள். மாஜினி. புரட்சியை நடத்த இத்தலிக்கு வந்தது.

1849 — ரோமாபுரியில் புரட்சி தோல்வியுற்றது. மாஜினியின் வருத்தம்.

1850 — மீண்டும் லண்டன் அடைந்தது.

1851 — லண்டனில் 'இத்தலியின் நண்பர்கள் சங்கம்' என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்தது.

1852 — மாஜினியின் தாயார் மரணம்.

1853 — புரட்சியை நடத்த மிலான் நகரம் போந்தது. ஆனால் புரட்சி தோல்வியுற்றது. எனவே லண்டன் திரும்பி விட்டான்.

1856 — புரட்சி நடத்த மீண்டும் ஜினேவா நகரம் போந்தது. ஆனால் புரட்சி தோல்வி யடைந்தது. பலமான அடக்குமுறை.

1859 — திரும்பவும் லண்டன் வந்தது. ஆனால் உடனே இத்தலிக்குச் சென்று புரட்சிக்குத் தூண்டியது.

1860—1866 — புரட்சிகள் நடத்தவும், காரிபால்டிக்குத் துணை செய்யவும், இத்தலிக்கு வருவதும் போவதுமாயிருந்தான்.

1861 — விக்டர் இமானுயுவல் இத்தலியின் மன்னனாக முடிசூடியது. முடியரசு ஸ்தாபிதம்.

1866—1872 — மாஜினியின் குடியரசு முயற்சிகள் எதுவும் பலிக்கவில்லை.

10—3—1872 — பைஸா நகரத்தில் மரணம்.

உ

மணிவாசகப்பெருமான்
அருளிய திருவாசகத்தில்
முந்நூறு பாக்களை
கொண்டு தமிழ்க்கடல்—
சிவமணி ராய.சொ.
தொகுத்த,

# திருவாசகத்தேன்

விலை ரூ 2—50

(தபால் செலவு தனி)


கிடைக்குமிடம்:

**பிரகாஷ் பதிப்பகம்**
**புதுக்கோட்டை**
திருச்சி ஜில்லா


உ

## எங்கள் சமீப வெளியீடுகள்

### வெ. சாமிநாத சர்மா எழுதியவை

| | | |
|---|---|---|
| கிரீஸ் வாழ்ந்த வரலாறு | .... | 9—00 |
| பிளேட்டோவின் அரசியல் | .... | 7—00 |
| ராஜதந்திர-யுத்தகளப்பிரசங்கங்கள் | .... | 5—62 |
| புராதன இந்தியாவில் அரசியல் | .... | 4—00 |
| மாஜினியின் மனிதன் கடமை | .... | 3—50 |
| கார்ல் மார்க்ஸ் | .... | 3—25 |
| எப்படி வாழவேண்டும்? | .... | 3—00 |
| ரூஸ்ஸோவின் சமுதாய ஒப்பந்தம் | .... | 3—25 |
| அரசியல் வரலாறு | .... | 2—62 |
| ஆசியாவும் உலக சமாதானமும் | .... | 2—50 |
| ஸ்ரீராமகிருஷ்ணர்—ஒரு தீர்க்கதரிசி | .... | 2—25 |
| ஐக்கிய தேச ஸ்தாபனம் | .... | 2—00 |
| பார்லிமெண்ட் | .... | 2—00 |
| ரூஸ்ஸோ | .... | 1—50 |
| மாஜினி | .... | 1—50 |
| ருஷ்யாவின் வரலாறு | .... | 6—50 |
| மானிட ஜாதியின் சுதந்திரம் | .... | 1—25 |
| அபிமன்யு | .... | 0—75 |
| மாஜினியின் மணிமொழிகள் | .... | 0—75 |
| நியூட்டன்—டார்வின்—எடிஸன் | .... | 1—25 |
| நமது தேசீயக் கொடி | .... | 0—50 |

(தபால் செலவு தனி)

**பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்**

**சென்னை : : புதுக்கோட்டை**

பிரபஞ்ச ஜோதி பிரிண்டிங் சர்வீஸ், புதுக்கோட்டை.